628

ARYA DHARMAM
TAMIL WEEKLY.

REGD. No. M. 2913.

ஆர்யதர்மம்

சந்தா விபரம்.

[தபால் சிலவுள்பட]

ஜீவிய சந்தா	...	ரூ. 50
ஒரு வருஷ சந்தா	...	ரூ. 3
ஆறுமாத சந்தா	...	ரூ. 1½

தனிப்பிரதி ஓரணு
மாதிரிப்பிரதிக்கு எழுதவும்

வியாழந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:- அக்நிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியார்.

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

விளம்பர விகிதம்.

ஒரு முழுப்பக்கம் ஒரு தடவை	ரூ. 20
அரைப்பக்கம் ஒரு தடவை	ரூ. 21
ஒருபத்தி ஒரு தடவை	ரூ. 8
இஞ்சு 1-க்கு ஒரு பத்திக்கு ஒரு தடவை	அணு 8

நீண்டகால விளம்பரங்களுக்கு
தனி சார்ஜ்.

பு-25 | கும்பகோணம் விக்கிரம-வருஷ ஆனி-மீ 28உ 1940-வருஷ ஜுலைமீ 11உ | ஸ-28

கல்கத்தா இருட்டறை ஞாபகசின்னம்

எடுத்துவிட ஸத்யாக்ரஹம். பலர் கைதியாயினர்.

சரித்திர பிரஸித்தமான இருட்டறை ஸம்பவத்தை ஞாபகபடுத்த கல்கத்தா கிளேவ் தெருவில் வைக்கப்பட்டிருக்கும் ஹால்வெல் ஞாபகசின்னத்தை எடுத்துவிட வேண்டுமென்றும் ஸ்ரீ ஸுபாஷ் போஸ் தலைமையிலுள்ள முன்னேற்றக்கக்ஷியார் ஸத்யாக்ரஹம் ஆரம்பித்திருக்கிறார்கள்.

3-உ யன்று ஒருகூட்டம் ஸத்யாக்ரஹிகள் கையில் சுத்திகள் ஸஹிதமாக, பல விதப்பாடல்களைப்பாடிக் கொண்டு ஊர்வலமாக மேற்படி ஞாபகச்சின்னத்தின் ஸமீபம் சென்றதும் பெரிய போலீஸ் அதிகாரிகள் அங்கு முன்னாடியே வந்து பந்தோபஸ்து செய்து கொண்டிருந்தவர்கள் மேற்படி ஸத்யாக்ரஹங்களை கைது செய்தார்கள். மேற்கொண்டும் பலர் கோஷ்டி கோஷ்டியாகச் சென்று ஸத்யாக்ரஹம் செய்து கைதியாகி வருகிறார்கள் வங்காளத்தில் இதனால் பரபரப்பு ஏற்பட்டிருக்கிறது.

மது விலக்கு முறிந்தது

பம்பாயில் குடியர்களில் கொண்டாட்டம்

பம்பாய் ஹைகோர்ட் தீர்ப்பு காரணமாக காங்கிரஸ் மந்திரி செய்த மதுவிலக்கு உத்திரவு சட்டப்படி செல்லாது போய் விட்டதால் பம்பாயில், சாராயக் கடைகளின் முன்பு ஏராளமான கூட்டம் கூடுகிறதாம். சில மாதங்களாகக் குடிக்க ஸௌகர்யமில்லாமல் கஷ்டப்பட்டவர்கள்தங்கள் மனம் திருப்தியடையும், வரையில் சாராயம் குடித்து மகிழ்ந்தார்கள்.

சாராயக் கடைக்காரர்களால் சாராயம் ஸப்ளை செய்ய முடியாமல் தத்தளிக்க நேர்ந்ததாம். குடிப்பவர்களுக்கு ஸௌகர்யமாக போலீஸ் பந்தோபஸ்தும் செய்யப்பட்டிருந்ததாம். மாஜி பிரதம மந்திரி ஸ்ரீ கெர் மிகவும் ஏமாற்றமடைந்து நிற்கிறார். பம்பாய் கவர்ன்மெண்டார் ஏதோ புதிய ஏற்பாடுசெய்யப் போவதாகச் சொல்லப்படுகிறது.

வைஸ்ராய் சென்னை விஜயம். ஐந்து நாள் தாமதிப்பார்

கனம் வைஸ்ராய் அவர்களும், அவரது மனவியும் இந்த மாதம் 27-உ சென்னை மாகாணத்திற்கு வந்து 5 தினங்கள் தங்கியிருக்கப் போவதாக முடிவாகியிருக்கிறது. அவர்கள் சென்னையிலும் உதகமண்டலத்திலும் தங்குவார்கள். யுத்த ஸம்பந்தமான ஏற்பாடுகளை முன்னிட்டே இந்தயாத்திரை செய்யப்படுவதாகத் தெரிகிறது.

மத ஸ்வதந்திரம் வேண்டும்

ரூஸ்வெல்ட் அபிப்பிராயம்

அமெரிக்க ஜனாதிபதியான மிஸ்டர் ரூஸ்வெல்ட் உலகத்தில் நிரந்தர ஸமாதானம் ஏற்படுவதற்கு ஐந்து ஸாதனங்களைக் கூறியுள்ளார். அவைகளில்மதஸ்வதந்திரமும் ஒன்று

“மதஸ்வதந்திரமிருந்தாலன்றி உலகில் நிரந்தரமான ஸமாதான நிலைமை ஏற்படுவதற்கில்லை. ஜனநாயக ஆட்சியுள்ள தேசங்களில் அத்தகைய ஸுதந்திரம் இருந்து வருகிறது என்று அவர் கூறுகிறார்.

ஜனநாயகத்தைவிட ஸர்வாதிகாரி முறை சிறந்ததே

ரூஸ்வெல்டின் அபிப்பிராயம்

அமெரிக்க ஜனாதிபதியான ரூஸ்வெல்ட் ஸர்வாதிகாரி முறைக்கு எதிரான ஜனநாயக முறையில் மிகுந்த பற்றுள்ளவர்தான் ஆயினும் அவர் தற்போது பிரபலமாகிவரும் ஸர்வதிகார முறையையும் கொண்டாடுகிறார். 5-உ அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்கூறுவதாவது:—

இதாலி, ஜர்மனி, ரஷ்யாபோன்ற தேசங்களில் உள்ள ஸர்வாதிகார முறையானது ஜநநாயக முறையைவிட அதிகத்திறமை வாய்ந்ததென நான் ஒப்புக்கொள்ளுகிறேன் அமெரிக்க நிர்வாஹ முறையில், சட்டம் நீதி, நிர்வாஹம் முதலிய துறைகளில் கட்டுப்பாடு காரணமாக தாமதம் ஏற்படுவது உண்மைதான். ஸர்வாதிகார முறை அதிகத்திறமை வாய்ந்த முறையில் நடப்பதைக் கண்டு அமெரிக்காவிலும் அது ஏற்படவேண்டுமென்று பலர் விரும்புவது பற்றி நான் வருத்தமடைகிறேன்,,

ஆலயப் பிரவேசம்.

காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் அவர்களாலும் மதிப்பிற்குரிய அறிஞர் பலராலும் புகழ்ப்பெற்ற ஓர் சம்பாஷணை புஸ்தகம். சீர்திருத்தகாரர்களால் ஹரிஜன ஆலயப் பிரவேசத்திற்கு அனுகூலமாகக் கூறப்படும் யுக்திகளை தகர்த்தெறியக்கூடிய பிரமாண பிரதியுக்தி வாதங்களுடன் கூடியதுடன் ஸஹிதன் ஹிந்து மதத்தின் பெருமையை எளிய தமிழ் நடையில் விளக்கும் புத்தகம் இது ஒன்றே. ஒவ்வொரு ஹிந்துவும் கட்டாயம் படிக்கவேண்டிய நூல். அணு6. தபால் ஸ்டாம்புகள் அனுப்பி கீழ்க்கண்டவரிடமிருந்து பெற்றுக்கொள்ளவும்.

கண்டமங்கலம்
பாலசுப்பிரமணிய அய்யர்,
10,பிலாத்தோப்பு, மயிலாப்பூர், மதறாஸ்.

WANTED.

Able and energetic hands to hold stocks in various centres. Must be capable of handling business tactfully and push through sales of high grown Nilgiri products of our Bengal Mattam Estate Teas, Coffee, and Potatoes. Decent salary, Commission. Godown rent and other allowances liberal.

Apply to :-
The Franco—Trades (India) Society,
Royal Road, Mettupalaiyam.

குழந்தைகளுக்கு வியாதி எல்லாம்
சேர்க்கை ஆஹாரத்தினால் தான்.
தாய்ப் பாலில் வளரும் குழந்தைக்கு
கட்டிமாந்தம் முதலிய நோய்கள் வாரா.
ஆயுர்வேதாசார்ய
V. B. நடராஜ சாஸ்திரீ அவர்களின்
பயஸ்யா
தாய்ப் பாலை அளவிலும் ஸாரத்திலும்
அபிவிருத்தி செய்யும் உத்தம ரஸாயனம்.
விலை ரூ 2—4—0 தான்.
எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்
அல்லது நேரில்
‘ஆத்ரேய’
ஆயுர்வேதிக் ஒர்க்ஸ்,
தென்னூர் ரோடு, திருச்சினாப்பள்ளி.
பயஸ்யா— புஸ்தகம் வேண்டுவோருக்கு இனாமாய் அனுப்பப்படும்.

ஆசாரம்

(கல்கத்தா ஸ்ரீ S வைதீஸ்வரய்யர்)

ஆத்மா வேறு. மனம் புத்தி தேகம் முதலானவை வேறு. ஆத்மாவுக்கு உரிமை மாத்திரம் உண்டு. அது சக்தி என்னும் பொருள். அதன் அபிவிருத்தியால் பரமாத்மதர்சனம் என்னும் வாழ்வும், அழிவால் அஜ்ஞானம் ஸ்தாவர மென்னும் தாழ்வும் உண்டாகின்றன. மனுஷிகளுக்கு கடமை மாத்திரம் உண்டு. அது அடக்கம் என்னும் கட்டு. அதன் பலத்தால் சக்தி லாபமும் தளர்ச்சியால் சக்தி நஷ்டமும் உண்டாகின்றன. கைகால்கள் மனதிற்கு அடங்கியிருப்பது போல மனுஷிகளும் ஆத்மாவிற்கு அடங்கியிருப்பது அவசியம், மனுஷிகள் அடங்காமல் உரிமைகள் கொண்டாடுவதால் பழக்கப்படாத குதிரை போல யஜமானனை வீழ்த்தி மேடுபள்ளம் கல்முட்களில் இழுத்தடிக்கின்றன. பழகாத குதிரை தன்னைத் தவிர யஜமானிருப்பதாகவும் அவன் நன்மையையும் நினையாதது போல மனுஷிகளும் தங்களைத்தவிர ஆத்மா இருப்பதாகவோ அதன் நன்மையையோ நினைப்பதில்லை. ஆத்மா இருப்பதாக இருந்தாலும் மனுஷிகளுக்கு அடங்கியதாயிருக்க வேண்டியதே அதன் கடமையென்று அஜ்ஞானத்தால் உரிமைகொண்டாடுகிறார்கள் மனிதர்கள், இதனை ஒழுங்குப்படுத்துவதற்காகவே ஒழுக்கங்கள்.

ஸந்த்யோபாஸனை

த்விஜர்கள் உத்தம காலந்தவறாமல் ஸந்தியோபாசனை அக்நிஉபாஸனை, ஸூர்ய நமஸ்காரம், தர்ப்பணம், பூஜை, வைச்வதேவம், அதிதிஸத்காரம் எனப்படும் நித்யகர்மாக்களை தினந்தோறும் செய்யக்கடமைப்பட்டவர்கள். [illegible] தீர்த்தங்கூட குடிக்கக்கூடாது. செய்யாவிட்டால் த்விஜரானதின் பிரயோஜனமில்லாது போகிறது. அதாவது ஆத்மசக்தியழிந்து, கெட்டநடைகள் பழகி, அடுத்த ஜன்மம் திர்யக் என்னும் மனிதனல்லாத ஸ்தாவர ஜங்கமங்களாகிறார்கள்.

ஸந்தி என்பது ஒன்றோடொன்று சேருவது. இரவும் பகலும் கூடுகிற பொழுது. அது இரவுமில்லை பகலுமில்லை. இரவு என்பதை இறப்பு துக்கம் முதலானதாகவும், பகல் என்பதை பிறப்பு சுகம் முதலானதாகவும் எடுத்துக் கொண்டால் சந்தி என்பது பிறப்பில்லாதது, சுகதுக்கமில்லாதது. அப்படி இருப்பது பரம்பொருள். (A point has no dimensions) அணுவிற்கு அகலம் நீளம் பருமன் முதலான அளவு இல்லை என்றது போன்றது. பரம்பொருளை அணுவென்றும் மகத் என்றும் பெரியோர் சொல்லுகிறார். ஆகவே காலையிலும் மாலையிலும் ஏற்படும் ஸந்தியாகாலம் அணுவாயிருப்பதால் அறியக்கூடாததாவும் கடவுளைத் தியானிக்க மிகவும் ஸாதகமுள்ளதாகவும் இருக்கிறது. அதிகாலையில் நக்ஷத்திரம் தெரியும் பொழுதே அர்யக்ம் கொடுத்து காயத்ரீ ஜபம் ஆரம்பித்து ஸூர்யோதயம் வரையில் கிழக்கு முகமாய் நின்று கொண்டு ஜபிக்க வேண்டியது முறை. மாலையில் சூர்யாஸ்தமனத்திற்கு சற்றுமுன் அர்க்யம் கொடுத்து ஜபம் ஆரம்பித்து நக்ஷத்ரம் உதயமாகும் வரையில் மேற்கு முகமாய் உட்கார்ந்து ஜபிக்க வேண்டியது முறை. நம்முடைய ஆத்ம சக்தி சூர்யனிடமிருந்தே அதிகரிக்கிறது. ஒரு செடி சூர்ய கிரணமே படாமற்போனால் சரியாய் வளராமற் போவதிலிருந்து கிரண சக்திகளை ஆராய்ச்சியாளர்களும் ஒப்புக் கொள்ளுகிறார்கள். (sun-kissed) சூரியன் முத்தமென்று பழத்திற்கு விளம்பரம் இவ்வூரில் செய்கிறார்கள். சூர்ய சக்தியால் நீராவியும் மேகங்களுமுண்டாகின்றன என்று நமது சாஸ்திரங்களிலுமிருக்கிறது. நாம் கொடுக்கும் அர்க்யங்களாலும் செய்யும் ஜபத்தாலும் நமது ஆத்மசக்திக்கும் ஸூர்ய சக்திக்கும் ஸந்தியுண்டாகிறது. காலை அர்க்யம் இருகைகளிலும் எடுத்து குதிகால்தூக்கி நின்று வணங்கி உயர எறியவேண்டும்.

இரண்டு மின்சார முளைகள் சமீபத்தில் வரும் பொழுது தீப்பொரி உண்டாவது போல் நிற்கவேண்டியவிதம் (bosture' அர்க்யத்தால் ஆகாசத்தில் (Waye) அலையுண்டாகிறது. தீர்த்தம் கிடைக்காத ஆபத்காலத்திலும் மண்மணலாலாவது அர்க்யம் கொடுக்கலாமென்று இருப்பதால் இந்த அலையின் அவசியத்தை அறியலாம் அர்க்யங்கள் முடிந்ததும் "அஸோ ஸூர்யனே பிரம்மம்,, என்று கிழக்கு நோக்கி நானே ப்ரம்மம், பிரம்மமேஸத்யம் என்று மார்பைத்தொடுகிறோம். அதாவது அர்க்யத்தால் கார்ய சம்பந்தமும் தியானத்தால் சக்தி சம்பந்தமும் உண்டாகின்றன. ஸந்தியாவந்தனத்தில் இவை அத்யாவசியம். காலையிலும் மாலையிலும் ஜபிக்கிறகாலம் ஒருமணி நேரமாவது ஆகும். இந்த காலம் முழுவதும் ஸூர்ய வெளிச்சம் அதிகரித்துக் கொண்டும் மாலையில் குறைந்து கொண்டுமிருக்கும். அந்த வெளிச்சத்தால் நமக்கு (Magnefisation காந்த மேற்றுதல் போன்ற அனுபவமுண்டாகிறது. இத்துடன் காயத்ரீயின் அர்த்தத்தையும் தியானம் செய்வதால் அபூர்வசக்தியுண்டாகிறது. எல்லாம் ஸந்தி என்னும் அணுமாத்திரகாலம் வியர்த்தமாகாதிருக்க ஜபிக்கிறோம். சாயந்திரம் ஸூர்யன் பூமிக்கு சமீபத்திலேயே இருப்பதால் அர்க்யம் உட்கார்ந்தபடியே தாழ்வாகக் கொடுக்கவே[illegible]ம்.

ஸந்தியோபாஸனையில் மற்ற அங்கங்களிலும் அர்த்தம் நிறைந்திருக்கிறது. அனுபவத்தால் விளங்கும். இங்கே சொல்லப் புகுந்தால் விரியும். ரஸிக்காது. பொதுவாக அவைகளெல்லாம் அகப்புறச்சுத்தங்களைச் செய்து உபாஸனைக்கு வேண்டிய யோக்யதையைக் கொடுக்கின்றன. முக்யமாய் மந்யுகிருதேபய:, காமோகாரிஷீத் மன்யுரகாரிஷீத் நமோநம:. என்று ஆத்மாவையும் பிரிப்பது கவனிக்கத்தக்கது.

அக்நி உபாஸனை

விவாகாக்நியை உபாஸிப்பது ஒளபாஸனம். அரணிக்கட்டையில் கடைந்து த்ரேதாக்நியைஉபாஸப்பது அக்நிஹோத்ரம் அக்நிஹோத்ரம் ஸௌகர்யமில்லாது போனால் ஒளபாஸனமாவது தினமிரண்டு வேளையும் ஸந்தியோபாஸனம் முடிந்ததும் செய்யவேண்டும். அக்நி உபாஸனைக்கே ஒளபாஸனமென்ற சிறப்புப்பெயர் கவனிக்க. அக்நிக்கு பலன் பத்நி. அக்நி,பத்நி இவை இல்லாத கிருஹஸ்ததர்மம் இல்லை. இதனால் பத்நிக்கு ஸஹதர்மசரீ என்று பெயர். தற்காலம் விவாஹாக்நியை ஒரே நாளிலும் நான்கு நாட்களிலும் முடித்து விடுகிறார்கள். இப்படி முடித்து அக்நியில்லாதிருப்பதால் தொடர்ந்து வரும் அக்நியில் செய்யவேண்டிய கர்மானுஷ்டானங்கள் ஸம்ஸ்காரங்கள் நிஷ்பலனுகின்றன. ஒளபாஸனத்தை விடுவது உபவீதத்தை விடுவது போன்றது. அக்நியில்லாத தம்பதிகளும் அவர்களுடைய ஸந்ததிகளும் மிருகங்களுக்கு ஸமமாக ஆகிறார்கள். பிரம்மசாரிகளும் ஸமிதாதானம் என்னும் அக்நிஉபாஸனம் இருவேளையும் செய்வதவசியம். மந்திரங்களின் அர்த்தம் கவனித்தால் பிரம்மதேஜஸ் என்னும் ஆத்மசக்தி உண்டாகிறது தெரியும். அரணியைக் கடையும் பொழுது கட்டையில் நெருப்பு இருப்பது தெரிகிறது. அதேமாதிரி தேகத்தில் ஆத்மா இருப்பது தெரியும். விடாமல் சூடு ஏறும்படி கடைவதால் அக்நிகிடைப்பதுபோல இடைவிடாத தியானத்தால் ஆத்ம தர்சனமுண்டு எனவும் தெரியும். அக்நிஜவலித்து திரவியங்களில் பற்றும் பொழுது நம்முடைய தேகமும் ஆத்ம சக்தியால் வியாபிக்கப்பட்டு ஜ்வலிப்பது தெரியும். ஆகுதியால் திரிகரண கார்யங்களும் ஆத்மஜ்யோதிகளிற்குஇரையாக வேண்டியது தெரியும். ஸூர்யகிரணங்களை பூதக்கண்ணாடியில் பிடிப்பதாலேயே அக்நி உண்டாவதால் ஸூர்யனிடம் உள்ள அக்நி அளவற்றதென்றும் அதற்கும் இங்குள்ள அக்நிக்கும் ஸம்பந்தமுண்டென்றும் தெரியலாகும். மேலும் உஷ்ணமுள்ளது மேலே கிளம்புகிறது. தியான உஷ்ணமும் ஆகுதி உஷ்ணமும் ஸூர்யனையே அடைகிறதென்றும் ஸூர்யனுலேயே விருத்தியாகிறதென்றும் ஊகிக்கலாம். அன்னத்தால் ரேதஸ், ரேதஸ்ஸால் ஜன்மம் உண்டாவதால் ஆகுதி செய்யப்படும் அக்ஷதையிலோ பாலிலோ எப்பொழுதாவது ஜீவனிருக்கத்தான் வேண்டும். அது ஆகுதியால் அந்த ஜன்மம் கழிந்து நல்லஜன்மமெடுக்கிறது. இவ்விதம் கீழ்மேலுலகங்களில் நல்ல ஜன்மத்திற்கு ஆகுதி ஒரு காரணமாகிறது சற்றுமுன் திரவியங்களாயிருந்தவை பிறகு பஸ்மமாகின்றன. உலகில் பஸ்மம்தான் மிஞ்சுகிறது என்ற சிந்தனைக்கும் அதனால் நிராசைக்கும், அதனால் அஹிம்ஸைக்கும் இடமேற்படுகிறது,

---

நாஸி ஆட்சியின் ரகசியம்

குழந்தையிலேயே குரூரப் பயிற்சி

யுத்தப் பிசாசு வளர்ந்த கதை

(லண்டன் ரேடியோவில்ரிச்சார்ட்
(கிராஸமன் பேசியது)

"ஜெர்மனியர் உழைப்பாளிகளான உயர்ந்த மக்கள் ஆயிற்றே? தீயரான ஒரு சில நாஸிகள் என்ன தான் உறுதிபடைத்தவர்களானாலும் இவர்கள் எல்லாரையும் எவ்வாறு அடக்கி ஆட்சிசெலுத்தமுடியும்?" என்று நமக்குச் சந்தேகம் தோன்றுவது சகஜந்தான். நாஸி ஆட்சிக்கு ஜெர்மன் ஜனங்கள் எப்படி சம்மதியளிக்கிறார்கள் என்று நாம் வினவுகிறோம்.

நாஸி ஆட்சியைப்பற்றி நமக்குக் கொஞ்சம் கூட உண்மை தெரியவில்லை என்பது தான் இந்தக் கேள்வியின் அர்த்தம்.

நாஸிகள் ஆதிக்கத்தின் அடிப்படையான உண்மை இது தான். தனிமனிதனுக்கு உரிமை என்பதே கிடையாது.

பாரபட்சமற்ற நியாயஸ்தலம், பேச்சு உரிமை, எழுத்து உரிமை, பிரதிநிதித்துவ ஆட்சி, தொழிற் சங்கம், இவை எல்லாம் தனிமனிதன் உரிமையைக் காப்பாற்றும் தற்காப்புஸ்தாபனங்கள். தடி எடுத்தவன் தண்டக்காரனுகாமலும், ஒரு சிலர் அதிகாரத்தைக்கைப்பற்றி மற்றவர்களைச் சுரண்டாமலும் தடுக்க வேண்டி இவைகளை எல்லாம் நாம் ஏற்படுத்தி வளர்த்து வந்திருக்கிறோம்.

இவை ஒவ்வொன்றையும் ஜெர்மனியில் நாஸிக்ள் தகர்த்தழித்திருக்கிறார்கள், அல்லது தங்களுக்குச் சாதகமாய்ப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

(தொடர்ச்சி 3-ம் பக்கம் பார்க்க.)

நாஸி ஆட்சியின் ரகசியம்

(2-ம் பக்கம் தொடர்ச்சி.)

ஜெர்மனியில் பேச்சு உரிமை கிடையாது அங்குள்ள பத்திரிகைகள் பொது ஜன அபிப்பிராயத்தை வெளிப்படுத்துவதற்காக இல்லை. பொது ஜனஅபிப்பிராயத்தை கவர்மெண்டின் இஷ்டப்படி திருப்பவே உபயோகமாகின்றன. தொழிற் சங்கங்கள் அடைக்கப்பட்டு விட்டன. கூலியும் மற்ற நியமங்களும் சட்டத்தால் நிர்ணயிக்கப்படுகின்றன. தொழிலாளருக்கு அரசாங்கத்தில் பங்கே இல்லை. ஆளுவோரின் ஆயுதங்களே அவர்கள்.

குடும்ப வாழ்வைக்கூட நாஸி ஆட்சி குலைத்துவிட்டது. குடும்பத்தின் அங்கத்தினர்களை சசாவேறு வேலைக்கு அரசாங்கம் அழைக்கிறது. குழந்தைகள் கூட ஹிட்லர் யுவர் சங்கத்துக்கே கடமைப்பட்டவர். குடும்ப விஸ்வாசம் போய்விட்டது.

மனிதர் உரிமையைக்காப்பாற்ற ஏற்பட்ட சட்டத்திற்கு, ரகசியப் போலீஸ் மீது அதிகாரம் இல்லை. வாரண்டு இல்லாமல் கைதி செய்யவும, நியாயாதிபதிகள் விடுதலை செய்த வரைக்கூடச் சிறச்சாலைகளில் பூட்டவும் ரகசியப் போலீஸுக்கு சக்தியுண்டு.

இவ்வாறு அதிகாரம் பூராவும் ஒரு ராட்சன் ஸ்தாபனத்தின் கையில் அகபட்டுக் கொண்டிருக்கிறது. ஜனங்கள் எண்பது லட்சம் பேராயிருந்தால் என்ன? அவர்களுக்குத் தற்காப்பே இல்லாமற் போய் விட்டது,

விளையக்கூடிய இளவயதிலேயே ஒரு தலைமுறை மக்கள் எல்லாரும் இந்த ஆட்சியில் அகப்பட்டுக் கொள்வதாக வைத்துக் கொள்ளுங்கள். கல்வி, பத்திரிகை, புஸ்தகம், சினிமா, மதப்பிரசங்கம் இவைகளை எல்லாம் குழந்தைகள் அறிவும் குணமும் வளருவதற்காகப் பயன்படுத்தாமல் அவர்கள் நல்ல குணங்களை அடக்கவும், பெற்றோர் வார்த்தையை மீறவும், இயற்கையாயுள்ள மிருக சுபாவத்தையும் குரூரகுணத்தையும் வளர்க்கவும் பயன்படுத்தி, அவர்களை ஓர் அரசியல் ஸ்தாபனத்துடன் பிணைத்து விடுவதாக வைத்துக்கொள்ளுங்கள் அதன்பயன் என்னவாகும் ?

ஒரு தலைமுறையைச் சேர்ந்த யுவர்கள் எல்லாரும், கடவுளை மறந்தவர்களாய், மிருகத்தனமும் குரூரமும், பொய்யும் புரட்டுமே நற்குணங்கள் என்று நினைக்க ஆரம்பித்து விடுவார்கள்.

இதுதான் சென்ற 7 வருஷங்களாய் நாஸிகள் ஜெர்மனியில் செய்துவந்தது. தற்போது பிரான்ஸிலும் பெல்ஜியத்திலும் கொள்ளையிட்டுச்சூரண்டும் ஜெர்மன் வாலிப வீரர்களை இப்படித்தான் நாசிகள் பழக்கியிருக்கிறார்கள். முந்திய தலைமுறையைச் சேர்ந்தவர்களோ வாயும் மெய்யும் கட்டுண்டு, மனம் நம்பிக்கை எல்லாம் இழந்து செயலற்றுப் போனவர்கள். அவர்கள் மக்கள் எல்லாரும் கொள்ளைக்கூட்டத்தார் குணங்களைஜெர்மன் நாகரீகத்துக்குஏற்றதாகக்கொள்ளப்பயிற்சியடைந்தவர்கள்.

நாசிகளிடம் ஒரு நற்குணமும் இல்லை என்று சொல்ல முடியாது. ஆனால் அந்த நற்குணங்கள் எல்லாம் ஒரே ஒரு நோக்கத்துக்குக்கட்டுப்பட்டவை. அதாவது அதிகாரப்பேராசைக்கு. இந்த பேராசை பித்தத்தினால் அவர்களுக்கு மனித உரிமை அத்தனையும் அலட்சியமாகப்போய் நற்குணங்களும் தியகுணங்களாய் மாறிவிடுகின்றன.

இக்காரணத்தினாலேயே, நாஸிப் புரட்சியில் தன்னலமற்ற தியாக உணர்ச்சி வளர ஹேதுவாயிருந்தும், நாசகாரப் புரட்சியாக அது மாறியது. நாஸி ராஜ்யம் மேலுக்கு சமூக சேவை என்ற போர்வையைப்போர்த்திக்கொண்டு உண்மையில் யுத்த யந்திரமாக உருக்கொண்டது. இந்தக் கொடிய யந்திரம் தன்னுடைய பலம் அதிகரிப்பதற் ஒவ்வொரு ஆண் பெண் குழந்தையையும் உபயோகப்படுத்திக்கொண்டுஎதிர்த்த வரை எல்லாம் அழித்து வருகிறது.

முதலில் அது ஜெர்மனிக்குள் மிஞ்சியிருந்த நல்லுணர்ச்சிகளை நாசம் செய்தது. பிறகு தன் கொடிய நகங்களால் அருகிலிருந்த சிறு நாடுகளைப் பற்றியது. இப்போது அதுநம்மையும் கடித்து விழுங்க வாய் திறக்கிறது.

இப்போது எது பிரச்னை? ஜெர்மனிக்கு வெளியிலுள்ள நாடுகள் எல்லாம் கூட நாஸி ஆட்சிக்கு உள்பட வேண்டுமா? ஜெர்மன் யுத்தப்பேயின் அடிமைகளுக்கு. ஐரோப்பிய மக்கள் எல்லாரும் அடிமைப் படவேண்டுமா? குழந்தைகள் கூட, பெற்றோருக்குஎதிராய்ப் பழகப்பட வேண்டுமா? இது தான் பிரச்னை.

புண்ட்ர தாரணம்

வஸ்திரத்தை உடுத்திக்கொண்ட பிறகு பாதப்ரக்ஷாளனமும் ஆசமனமும் செய்யத் தக்கது. [எப்பெப்போது வஸ்திரம் தரித்த போதிலும் அப்பப்போது இவையிரண்டும் அவச்யம்.] அதன் பின் புண்ட்ரதாரணம் வருகிறது. புண்ட்ரமாவது—நெற்றியிலும் மற்றவிடங்களிலும் இடவேண்டிய தொரு குறி. அதாவது சின்னம். புண்ட்ரம் என்ற சொல் ஸம்ஸ்கிருத பாஷையைச் சேர்ந்ததாகும். அது புண என்ற தாதுவிலிருந்து பிறந்தது. புண என்னும் தாதுவுக்கு நல்ல கார்யம், சுபகர்மம் என்று பொருள். புண்யம் புண்டரீகம் இவையும் இதே தாதுவிலிருந்து பிறந்தவை. இவை எல்லாவற்றிற்கும் சுபம் என்பதே மூலப் பொருளாகும். ஆகையால் புண்ட்ரம் என்பதற்கு மங்களகரமான ஓர் அடையாளம் என்று அர்த்தம். நெற்றியில் புண்ட்ரம் தரிப்பதால் இரண்டுவிதமான ப்ரயோஜனங்கள் உண்டு. அதாவது—(1) தங்கள் தங்கள் மதக் கொள்கையை பிறருக்கு இடு குறியைக் கொண்டு அறிவிக்கை. (2) சரீரத்தை பூதப்ரேத பிசாசாதிகள் தொட்டு அதனால் சிற்சில வாயு சேஷ்டைகளும், மனக் கோளாறுகளும் உண்டாகாமல் ரக்ஷிக்கை. புண்ட்ரங்கள் தரிக்கப்பட வேண்டுமென்பது ச்ருதி, ஸ்மிருதி, புராண, ஆகமங்கள் முதலிய எல்லா சாஸ்திரங்களிலும் அத்யாவச்யமாகக் கூறப்பட்ட விஷயம். அதற்கு முன் சொன்ன இரண்டு ப்ரயோஜனங்கள் தவிர, மற்றொன்றுமுண்டு. சரீரத்துக்கு அலங்காரம் என்பது. சரீரத்தில் விலையுயர்ந்த வஸ்திரங்களை தரிப்பதும், புண்ட்ரதாரணமும், சுவர்ணரத்ன மயங்களான பூஷணங்களை தரித்தலும், புஷ்ப சந்தனாதி வாஸன த்ரவியங்களை தரிப்பதும் முகத்தில் கடு கடுப்பின்றி எப்போதும் ஸந்தோஷமான அறிகுறியும் சரீரத்துக்கு அலங்காரமும் ஆரோக்யமுமாகும் என்பது அநுபவ சித்தம்.

மூன்றுவித புண்ட்ரங்கள்

ஊர்த்துவ புண்ட்ரம், திர்யக் புண்ட்ரம், வர்த்துல புண்ட்ரம் என்று மூன்று வகை புண்ட்ரங்கள் உண்டு. ஜாதி பேதத்தையும் மத பேதத்தையும் காரணமாகக்கொண்டு சாஸ்திரங்களில் பற்பல புண்ட்ராகாரங்கள் விதிக்கப்பட்டிருக்கின்றன. நெற்றியில் கீழிலிருந்து மேல்நோக்கிக் காணப்படும் இடு குறி ஊர்த்துவ புண்ட்ரமெனப்படும். குறுக்காக இருமுனைகள் இரண்டு காதுகளைத் தொடும்படி இடப்படும் குறிக்கு திர்யக் புண்ட்ரம் எனப் பெயராகும். ஊர்த்துவ புண்ட்ரத்தை தரிப்பவர் விஷ்ணுலோக ப்ராப்தியை விரும்புமவர் என்றும், திர்யக் புண்ட்ரதாரிகள் சிவலோக ப்ராப்தியை விரும்புகின்றனர் என்றும், வர்த்துல புண்ட்ரதாரிகள் ஸ்வர்க்காதி புண்ய லோகங்களைச் சேர விரும்புகிறவர்கள் என்றும், முறையே மூன்றும் அவரவர் மனப்பான்மையைக் காட்டும்.

திரவிய நிர்ணயம்

ஊர்த்துவ புண்ட்ரத்துக்கு, கோபீ சந்தனம், வெண்மண் இவற்றை உபயோகிக்க வேண்டுமென்றும், வைஷ்ணவ பரமை காந்திகளுக்கு வெண்மண் ஒன்றே க்ரஹிக்கத் தக்கது என்றும் திர்யக் புண்ட்ரத்துக்கு விபூதியே திரவியமென்றும் நிர்ணயிக்கப் பட்டிருக்கிறது, வர்த்துல புண்ட்ரத்துக்கும் சந்தனமே. மஹோபநிஷத்து முதலான உபநிஷத்துக்களிலும் தக்ஷ ஸ்மிருதி முதலான ஸ்மிருதிகளிலும், பாத்மம் முதலான புராணங்களிலும், விசேஷித்து பாஞ்சராத்திர சாஸ்திரங்களிலும் ஊர்த்துவ புண்ட்ரதாரண மஹிமை, வெண்மண் சிறப்பு, இவை விசேஷமாய் காணலாம்.

வைஷ்ணவர்கள் பகவானுடைய வ்யூஹங்களை உபாசிப்பவர். ஆகையால் அந்த வ்யூஹங்களின் உட்பிரிவைக் காட்டுமவையான கேசவாதி த்வாதச நாமங்களை தனது தேஹத்தில் ஆவாஹனம் செய்துகொண்டு பகவதாராதன ரூபமான ஸ்வதர்மங்களைச்செய்வது நன்று. ப்ரதிதினம் 12 நாமங்களையும் 12 இடங்களில் ஆவாஹித்து அநுஸந்தித்து வருவது விசேஷம். புண்ட்ரங்களில் [illegible]னம் செய்ய சௌகர்யமில்லா விட்டாலும்

दामोदरं केशवं च नकदापि-परित्यजेत्

தாமோதரனையும் கேசவனையும் எப்போதும் விடக்கூடாது என்ற விதிப்படி நெற்றியிலும் பின் கழுத்திலும் புண்ட்ராதாரணத்தை செய்து மற்றவிடங்களிலும் சேர்த்து பன்னிரு நாமங்களை தியானித்தல் வேண்டும். இப்படி பிரதி தினம் செய்து வந்தால் சரீரத்தில் பிணி அணுகாது, மேனி குலையாது, முகத்தில் வைஷ்ணவ ஒளி வீசும், ப்ரம்ம தேஜஸ் ஓங்கும். புகழ் பெறலாம், இன்பமுற வாழலாம். நம்புங்கள், நம்புங்கள்.

(வே. தி.)

கிராப் செய்து கொள்ளக் கூடாது

மாணக்கர்களுக்கு உத்திரவு

வீட்டில் பிரார்த்தனை செய்யவேணும்

எல்லைப்புற மாகாணத்திலுள்ள சார்ஸாடாவிலுள்ள கவர்ன்மெண்ட் ஹைஸ்கூல தலைமை உபாத்யாயர் மாணவர்களுக்கு ஓர் உத்திரவு போட்டார்.

மாணவர்கள் ஒவ்வொருவரும் தமது வீட்டில் தெய்வ பிரார்த்தனை நடத்த வேண்டுமென்றும், அப்படி நடத்தியதற்குப் பெற்றோர்களிடமிருந்து அத்தாக்ஷி பத்திரம் வாங்கி வரவேணுமென்றும் மேற்றிசை முறையில் மாணவர்கள் தலையை கிராப்பு செய்துகொள்ளக் கூடாதென்றும் அந்த உத்திரவில் சொல்லப்பட்டிருந்தது. இதனால் சில மாணவர்கள் கோபமடைந்து கிளர்ச்சி செய்தனர். பள்ளிக்கூடம் போகாமல் நின்றனர். இவர்களது குறையைகல்வி இலாகா அதிகாரிகள்கவனிப்பதாக வாக்குறுதிகொடுத்திருக்கிறார்கள்.

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां।
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்
விக்ரம-ஹு ஆனி-மீ 28வ

ஆலயபிரவேச ஆதாரம் ஆடிப்போயிற்று.

ஹா! ஹா! மஹாக்ரூரமாகிய அந்த ஜூலை மீ 8வ யைக் கடந்து விட்டோம். நினைத்த மாத்திரத்திலேயே இந்த தினமானது 25 கோடி ஆஸ்திக ஹிந்துமக்களின் மனதில் நடுக்கத்தைக் கொடுக்கிறது. இந்த தினத்தில் தான் பாரததேசத்தின் பிராண ஸ்தானமாகிய ஸ்ரீ மீனாக்ஷிதேவியின் ஸான்னித்ய சக்தியானது அநியாயமாக அழிக்கப் பட்டது. இந்த நாளில் தான் நமது புண்ய பூமியின் நீதி தேவதையின் சிரஸ் சேதனம் செய்யப் பட்டது. இந்த துர்ப்பாக்கிய தினத்தில் தான் பாரதப்புதல்வர்கள் அனுபவித்து வந்த மதஸ்வாதந்திரியமானது ஆஸுர ஆக்ஷி நடத்தியவர்களால் பலாத்காரமாக அழிக்கப் பட்டது. இந்த துக்கதினத்தில் தான் கோடிக்கணக்கான ஆஸ்திக ஹிந்துக்கள் தெய்வங்களுக்கு நேர்ந்த துர்கதியை கண்டு பரிதவித்து பிரலாபித்துக் கண்ணீர் சொரிந்த வண்ணமாயிருக்க நேர்ந்தது. பாரததேசம் முழுவதும் ஒரே துக்க ஸமுத்ரத்தில் மூழ்கி யிருந்ததும் இந்த துர்த்தினத்திலே தான். அன்றும், அதை யொட்டிய தினங்களிலும் நீதிமுறை யற்ற ஆக்ஷி நடத்திய கொடுங்கோன்மையரின் ஸ்வஜன, ஸ்வமதத்துரோஹ கார்யம் ஒவ்வொன்றையும் நினைப்பவரின் உள்ளம் பதறாமலிருக்குமா?

நாம் சோகமடைய இது தருணமன்று. சோகம் தீரபுருஷனுக்கு ஏற்ற தன்று. அது மனதை சஞ்சலம் அடையச் செய்யும். சென்ற வருஷம் அதிக்ரமம் நடந்தது. ஒரு வருஷத்திற்குள் துரோஹிகளின் தலை கீழான வீழ்ச்சியை இன்று நாம் கவனிக்க வேண்டாமா? தைய்வம் நின்று கொல்லு மென்பார்களே! இது ஸத்யமாகி விடவில்லையா? சென்ற வருஷம் இச்சமயம் அதிகாரஸிம்மாஸனத்தில் வீற்றிருந்து ஸாத்விக பிரஜைகளை அகம்பாவத்தினாலும், அதிகாரமமதையாலும் விரட்டிக்கொண்டு அட்டஹாஸம் செய்தவர்களின் கதி இன்று என்ன? அவர்கள் எங்கே? திமிர் நிறைந்த அவர்களது அவமதிப்புப் பேச்சுக்கள் எங்கே? அஹம் பாவம் படைத்த கார்யங்கள் எங்கே? எல்லாம் அஸ்தமித்துப் போயினவே? சென்ற வருஷம் இந்நாளில் இந்திரபோக பதவில் மூழ்கியிருந்தவர்கள் இன்று நாடோடிப்பேர்வழிகளாகி திரிய நேர்ந்ததே? இது தெய்வாபசாரத்தின் பலனென்று ஆஸ்திகர்கள் நினைக்க வேண்டாமா? மனித பலத்தைவிட தெய்வபலமே நம்மை மறைவில் நின்று பாதுகாக்கக் கங்கணம் கட்டியிருப்பதும் விளங்கவில்லையா? ஒரு காலத்தில் உலகத்தை ஆட்டி வைக்கும் சக்தி படைத்தவர்கள் காலக்கிரமத்தில் இருக்குமிடம் தெரியாமல் மூலையில் மறைந்து போகும் வழக்கத்தை உலக சரித்ரமறிந்தவர் மறக்க முடியுமா? இன்று காங்கிரஸைப்பற்றியோ காந்தியைப்பற்றியோ' ஆலயப்பிரவேசத்தைப் பற்றியோ பேசுகிறவர்களோ, நினைப்பவர்களோ ஒருவர்கூட இல்லையே? காந்தி நினைவுகனவிலிருந்துகூட நழுவி விட்டதே?

ஆலயபிரவேசத்தின் ஆதிபுருஷன் காந்திதான். அவர்தான் இந்தியாவில் இந்த சீர்திருத்தத்தைக் கிளப்பியவர். தாழ்ந்த ஜாதியாரை, உயர்ந்த ஜாதியானுக்கு ஸமமான நிலைமையில் தூக்கிவிடுவதே அவரது தீவ்ரக் கொள்கை. ஆலயபிரவேசம் உயர்ந்தஜாதியான் செய்யும் உயர்ந்த கார்யம் அதனால் தான் தாழ்ந்தவர்களை உயர்த்துவதற்கு ஆலயபிரவேசத்தை அவர்கண்டு பிடித்தார். அப்போதுதான் ஜாதி அழிவும் உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்ற வித்யாஸமும் நீங்கும்

காந்திஜீக்கு, ஸத்யமும், அஹிம்ஸையும் பிரதானங்கள். இவைகளை ஸாதிப்பதற்காகவே அவர் ராஜ்ய ஸமூஹ விஷயங்களில் புகுந்திருக்கிறார். மனிதனுக்கு மனிதன் வித்யாஸம் காட்டுவது அஹிம்ஸைக்கு முரண்பட்டதென்று காந்திஜி கொள்கை. வித்யாஸமென்பது ஹிம்ஸையின்குறியாகும். அது ஹிம்ஸையில் சேர்ந்ததென்பதும் அவரது கொள்கை. அஹிம்ஸையின் வெற்றியை உத்தேசித்தே அவர் ஜாதிபேதத்தையும் தீண்டாமை விலக்கையும் போதித்தார். ஆதலால் அவர் எடுத்துக் கொண்ட ஆலயப்பித்வேச இயக்கமும் அஹிம்ஸை காரணமாகவே ஏற்பட்ட தென்பதை அவரே பல தடவை விளக்கியிருக்கிறார்.

அத்தகைய காந்திய அஹிம்ஸையின் கதி இன்று எப்படியாகி விட்டதென்பதை கவனியுங்கள்! காந்திய அஹிம்ஸையை ஓர் உயர்ந்த வரப்ரஸாதமாக நினைத்து ஆர்ப்பாட்டம் செய்து வந்த காங்கிரஸ் ஸ்தாபனமே, அந்த அஹிம்ஸையை துரத்தி விட்டு விட்டது. காந்தியத்தைக் கை நழுவ விட்டு விட்டது. அஹிம்ஸையையால் கார்யம் சாயாதென்றும் அது தங்களுக்கு வேண்டியதில்லை யென்றும் காங்கிரஸ்காரர்கள் நிர்தாக்ஷிண்யமாகச் சொல்லவிட்டார். காந்திவார்த்தையைக் கேட்டே இதுவரையில் அஹிம்ஸைப் படையினராக இருந்தவர்கள் இனி அந்த பிரசாரத்தில் இறங்கமாட்டார்களென்று நம்பலாம். காந்தி எண்ணப்படி ஆலயப்பிரவேசத்திற்கு அஹிம்ஸையே அடிப்படையாகும். அந்த ஆதாரம் ஆட்டம் கண்டு விட்டதாலும், காந்தீயம் மறையும் அறிகுறிகள் தோன்றி விட்டதாலும் ஆலயப்பிரவேசத் தீங்கும் தானகவே மறையும் காலம் ஸமீபித்து விட்டதெனலாம்.

ஆலயப்பிரவேச துக்க தினம்.

கும்பகோணத்தில் பொதுக்கூட்டம். கல் வீச்சு!

சென்ற வருஷம் ஜூலைமீ 8வ மதுரை மீனாக்ஷி கோவிலில் நடந்த திருட்டுத்தன ஆலயப்பிரவேசத்தின் வருஷாப்திக துக்க தினத்தை 8வயன்று நடத்தும்படி நமது தலைவர் விடுத்துள்ள நியமனப்படி திங்கள் கிழமையன்று மாலை 7 மணிக்கு கும்பகோணம் டபீர்படித்துறையில் ஓர் பொதுஜனக் கூட்டம் நடந்தது. லௌகிக பிரமுகர்களும் வித்வான்களும், பொதுஜனங்களுமாக ஏராளமான பேர்கள் கூடியிருந்தனர்.

அட்வகேட் ஸ்ரீமான் எம். கே. வைத்யநாதய்யர் அவர்கள் தலைமை வஹித்தார்.

தலைவர் முகவுரையாகப்பேசுகையில் இக்கூட்டத்தின் நோக்கத்தை எடுத்துக்கூறி சென்ற வருஷம் மதுரையில் ஒன்றன்பின் ஒன்றாக நடந்த அநீதிகளை விஸ்தாரமாகக் குறிப்பிட்டார். பிறகு சாரதாச்சட்டத்தால் நமதுகுடும்பங்களில் ஏற்பட்டுள்ள கஷ்டங்களையும் கூறி அதை ரத்து செய்யப்பாடுபட வேணுமென்றும் சொன்னார். பால்யவிவாகமே சிறந்ததென பல ஆங்கில மேதாவிகள் கூறியிருப்பதையும் வாசித்துக்காட்டினார்.

பிரகிருத யுத்தத்தில் நாம் பல வழிகளாலும் நமது சக்ரவர்த்திக்கு ஜயம் உண்டாகுமாறு உதவி செய்யவேணுமென்றும் கேட்டுக்கொண்டார்.

பிறகு குடந்தை வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்க கார்யதர்சி ஸ்ரீமான் நடராஜ சாஸ்திரி சில தீர்மானங்களை பிரேரேபித்தார்.

இந்தயுத்தத்தில் பிரிட்டனுக்கு வெற்றியேற்படவேண்டு மென்று விரும்புவதாயும்,

மதுரை மீனாக்ஷி கோவில் ஆலயப்பிரவேச அக்ரமத்தைக் கண்டிப்பதாயும் ஆலயப்பிரவேசச்சட்டத்தை ஆக்ஷேபிப்பதாயும் அதைஉடனே ரத்துசெய்து மத நடுநிலைமைக் கொள்கையைக்காப்பாற்றும்படி வைஸ்ராய் அவர்களை கேட்டுக்கொள்வதாயும் சாரதாச்சட்டத்தை ரத்து செய்யவேண்டுமென்றும் ராஜீய சீர்திருத்த விஷயமாக வைஸ்ராய் அவர்கள் பற்பல கக்ஷித்தலைவர்களையும் கலந்து பேசுவதுபோல் ஸநாதநத் தலைவர்களை அழைக்காததால், அதன் முடிவு பிரதிநிதித்வம் வாய்ந்ததாயிரா தென்றும், பெரும்பான்மையோர் ஸநாதநிகளென்றும் ஆதலால் அவர்களுக்குத் தக்க பிரதிநிதித்வம் அளிக்க வேண்டுமென்றும் இக்கூட்டம் தீர்மானிக்கிறது''

இந்த தீர்மானங்களை ஸ்ரீமான் நடராஜன் பிரேரேபித்து விஸ்தாரமாகப்பேசினார். காங்கிரஸ்காரர் முக்யமாக காந்திஜி ஹிந்துமதத்தினருக்கு துரோஹம் செய்து மஹம்மதியரிடம் சரணாகதி யடையும் கொடுமையை உதாஹரண பூர்வகமாக விளக்கினார். வகுப்புத்தீர்ப்பு, புத்தகயா, காச்மீர நிலைமை ஹைதராபாத் ஸத்யாக்ரஹம், போன்றவைகளில் காந்தி, மஹம்மதியர் சார்பாக நின்றதை நிரூபணம் செய்தார்.

இவர் பேசுகையில், காந்திஜியை "மஹாத்மா'' என்று சொல்ல தாம் விரும்பவில்லையென்றும், "துராத்மா'' என்றே தாம் பஹிரங்கமாகச் சொல்ல தைர்யம் கொள்வதாயும் கூறினார். இச்சமயம் வெளியிலிருந்து

(5-ம் பக்கம் பார்க்க)

"இந்தியாவை துண்டாக்க இடம் கொடோம்"

உயிருள்ள வரை எதிர்ப்போம்
டாக்டர் நாயுடு பேச்சு
குடந்தையில் மஹாஸபா பிரசாரம்

கும்பகோணத்தில் ஹிந்து மஹா ஸபை பிரசாரநிமித்தமாக தமிழ் நாடு மஹா ஸபாத்தலைவரான டாக்டர் வரதராஜுலு நாயுடு 4-௳ யன்று குடந்தைக்கு வந்தார் நகரிலுள்ள பலமுக்யஸ்தர்களுடன், முக்யமாக ஸநாதநத் தலைவர்களுடனும் ராஜீய நிலைமையைப்பற்றியும், மஹாஸபை நோக்கத்தைப்பற்றியும் கலந்து பேசினர்.

அன்று மாலை 6 மணிக்கு காங்கேயன் பார்க்கில் பிர்மாண்டமான பொதுக்கூட்டம் நடைபெற்றது. 5 ஆயிரம் பேர்களுக்கு மேல் கூடியிருந்தனர் ஒலிபரப்பும் கருவிகள் அமைக்கப்பட்டிருந்தன.

குடந்தையிலுள்ள சில சங்கங்கள் சார்பாக டாக்டர் நாயுடுவுக்கு உபசாரங்கள் செய்யப்பட்டன.

ரிடையர்ட் ஜில்லாஜட்ஜ், திவான் பகதூர் ஸ்ரீமான் கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரிகள் அவர்கள் மேற்படிக் கூட்டத்தில் தலைமை வகித்து ஹிந்து மஹா ஸபையின் நோக்கங்களைப்பற்றித் தெளிவாகக் கூறினர். அத்தகைய ஸபையொன்று தற்சமயம் கட்டாயமிருக்கவேண்டுமென்றும், ஹிந்து ஸமூஹத்தின் நன்மைகளும் பாத்யங்களும் ரக்ஷிக்கப்படவேண்டியதற்கு மஹா ஸபை ஒன்றுதான் பாடுபட்டு வருவதாயும் குறிப்பிட்டார்.

பிறகு ஸ்ரீமான்—நாயுடு பேசுகையில்:—இந்தியாவில் முஸ்லீம்களின் ஆதிக்யம் அதிகரித்து ஹிந்துக்களின் உரிமைகள் பாதிக்கப்படுவதை விரிவாக நிரூபணம் செய்தார் காங்கிரஸ் வாதிகள் தான் இந்த நிலைமைக்கு ஜவாப்தாரிகளென்றும் ஹிந்து முஸ்லீம் ஒற்றுமையென்ற பைத்யம் பிடித்து அவர்கள் முஸ்லீம்களை அநுஸரிக்க ஆரம்பித்ததாலேயே மஹம்மதியர்கள் அதிகபிருக்காட்டி நம்மை விரட்ட ஆரம்பித்து விட்டதாயும், வந்தேமாதரகீதம், தேசியக் கொடி போன்ற விஷயங்களில் காங்கிரஸ்காரர்கள் உறுதியற்று பயங் கொள்ளித்தனமாக மஹம்மதியர்களின் கூச்சலுக்குப் பணிந்தது மானக்கேடான விஷயமென்றும்.

ஆகவே இனி இந்திய ராஜீய விஷயமாக ஹிந்து முஸ்லீம் ஒற்றுமை என்ற பேச்சே இருக்கக் கூடாதென்றும், அதற்காக எவரும் முயற்சி செய்வதை ஹிந்து ஸபை விரும்பவில்லையென்றும், இந்த ஒற்றுமை பேச்சைப் பேசுவதாலேயே ஹிந்துக்கள் நிலைமை பலஹீனப் படுத்துவதாகவும் ஸ்ரீமான் நாயுடு வெகு அழுத்தமாகக் கூறினர்.

ஹிந்துக்களின் ஹிந்துத்வமும், ஹிந்துஸ்தானத்தின் மஹிமையையும் அழியாமல் இந்தியாவைக்காப்பாற்றும் ஸங்கம் மஹா ஸபை ஒன்றேதானென்றும், மற்ற ஸங்கங்கள் பரதேச அநாகரிகங்களை நம்மிடையில் புகுத்தி நமது தனி கௌரவத்தை நாசமாக்கிவருவதாயும் சொன்னர்.

மேலும், இங்கிலீஷ்காரருக்கு இங்கிலாந்தும், அமெரிக்கருக்கு அமெரிக்காவும் ஜர்மனியருக்கு ஜர்மனியும் துருக்கருக்குத் துருக்கியும், இன்னும் பல ஜாதிகளுக்கும் அவரவர்களுக்கென்றே தனிதேசமிருப்பதுபோல், ஹிந்துக்களுக்கு ஸொந்தமான தேசம் ஹிந்துஸ்தானம் தானென்றும் வேறு எந்த ஜாதியாருக்கும் இத்தேசத்தில் பாத்யம் கிடையாதென்றும். எவ்வளவோ லக்ஷக்கணக்கான வருஷங்களாக இந்தியாவானது ஹிந்துக்களின் சாத்வதவாஸஸ்தானமாயிருப்பதாயும், இன்று புதிதாக வந்த ஜாதியார் நம்மை விரட்டி இங்கு அரசாள நாம் இடம் கொடுக்காமாட்டோமென்றும் கூறினர்.

ஜின்னாவின் பிரிவினை திட்டமானது ஒரு நாளும் நடக்ககூடியதல்லவென்றும், ஹிந்து ரத்தம் ஓடும் 26 கோடிமக்களும் உயிர் உள்ளவரையில் இந்த பிரிவினையை எதிர்த்து தவிடு பொடியாக்கக்கங்கணம் கட்டியிருப்பதாயும் ஹிந்துக்களுக்குள்ளேயே அநாவசியமான ஜாதி வகுப்புச் சண்டைகளை ஒழித்து வலுவான ஐக்யத்துடன் நமது எதிரிகளை நாம் முறியடிக்க வேணுமென்றும் பேசினர்,

காந்திஜீயின் அஹிம்ஸையைப் பற்றி டாக்டர் நாயுடு கண்டித்துப் பேசுகையில் கிருஹஸ்த தர்மங்களில் ஈடுபட்டு உலகவாழ்க்கை நடத்துவோரிடை அஹிம்ஸை தர்மத்தைப் போதிப்பது, சாஸ்திரத்திற்கும், உலக அநுபவத்திற்கும் ஒவ்வாதென்றும் ஓரளவு ஹிம்ஸை இருந்து தீரவேண்டியது தானென்றும், காந்திஜீ, ஹிட்லருக்கும் பிரிட்டனுக்கும் அஹிம்ஸோபதேசம் செய்வது நகைப்பிற்கிடமாயிருப்பதாயும். நியாயமான ஹிம்ஸையை அடிப்படையாகக் கொண்டே பகவான் உலகஸிருஷ்டி செய்திருப்பதாயும் நிரூபணம் செய்தார். கடைசியாக ஹிந்து மஹாஸபையை வலுப்படுத்த யாவரும் உதவிபுரிய வேண்டுமென்றும் ஒவ்வொரு வீட்டிலும் ஒருமனிதனை ஹிந்து மஹாஸபைக்கு அர்ப்பணம் செய்து தேசப் பாதுகாப்பும் ஹிந்து ஸமூஹ ரக்ஷணமும் செய்ய முன்வரவேணுமென்றும் கேட்டுக் கொண்டார். வந்தனோபசாரத்துடன் இரவு 9மணிக்கு கூட்டம் அமைதியாகக்கலைந்தது.

நமது நிருபர்

(4 பக்கம் தொடர்ச்சி)

கூட்டத்தில் கல் வீசி யெறியப் பட்டது. போலீஸ்காரர்கள் வெளியே சென்று விசாரித்தனர்.

தீர்மானங்களை ஸ்ரீ ராமாநுஜதாதாசாரியார் ஆதரித்துப்பேசினர். தலைவரால் தீர்மானங்கள் வோட்டுக்கு விடப்பட்டு நிறைவேறியதும் முடிவுரை கூறியபின் ஸபை கலைந்தது.

நமது நிருபர்.

"மீனாக்ஷி கோவிலைக் காப்பாற்றவும்"

மத நடுநிலைமை வேண்டும்.
வைஸ்ராயிக்கு ஸ்ரீ நடேசய்யர் தந்தி

அகில இந்திய வர்ணாச்ரம சங்க காரியதரிசியாகிய ராவ்சாகேப் என். நடேசய்யர் கீழ்கண்ட தந்தியை மே. த. வைஸ்ராய்க்கு அனுப்பினர்:—

"மதுரை மீனாக்ஷி கோவிலைக் காப்பாற்றி பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை காப்பாற்றவும். ஒவ்வொரு நிமிஷமும் அருமையானதாகும்.

"காங்கிரஸ் நோக்கமானது ஹிந்து மதத்தையும், கெடுத்து கோவில்களை அசுத்தப் படுவதேயாகும். மறுபடியும் அம்மாதிரி அசுத்தப்படுவது நிச்சயம். தயவு செய்து மதநடுநிலைமையை அங்கீகரித்து, பிரகடனபடுத்தவும். காந்திஜீ தெய்வ பக்தியுள்ள ஹிந்துக்களின் பிரதிநிதி இல்லையாதலால் அவர் அபிப்பிராயத்தை உதாசீனம் செய்யவும்''

சதாபிஷேக சாந்தி

திருச்சி

ஜனன௵ முதல் 81 ௵ 1 மாதத்திற்கு 973- சந்திரனும் மல மாஸத்தின்படி 27- சந்திரனும் சேர்ந்து 1000 சந்திரதரிசனம் பூர்த்தியானபடியால் போதாயனத்தில் சொல்லியிருக்கும்படி மணக்கால் பிரம்மஸ்ரீ சுந்தரேச தீக்ஷிதர் அவர்கள் ஈச்வர கிருபையாலும் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளான கும்பகோணம் ஸ்ரீமத் சங்கர பகவத்பாதஸ்வாமிகளுடைய அனுக்ரஹத்தால் விக்ரம ௵ ஆனி ௴ 10௳ (23—6—40) திருச்சி மலைக்கோட்டை ஆரக்ரஹாரத்தில் அவருடைய கிரகத்தில் சதாபிஷேக சாந்தியும் ருத்ர ஏகாதசியும் செய்து கொண்டார். போலகம் பிரம்மஸ்ரீ சுந்தரேச சாஸ்திரிகள் முதலிய அனேக பெரியோர்கள் வந்திருந்து அதிவிமர்சையாக நடத்தி வைத்தார்கள். ரித்விக்குகளுக்கும் இதர பிராம்மணர்களுக்கும் விசேஷ தக்ஷிணைகளுடன் போஜனம் நடந்தது. மத்தியானம் 3- மணிக்கு மலைக்கோட்டை சுற்றி ஊர்வலம் நடந்தது. ஆசார்ய ஸ்வாமிகள் ரூபாயும் சால்வையும் அனுப்பியிருந்தார்கள்.

குருஸ்வாமி அய்யர்.

காரியக்கமிட்டி முடிவு

பூர்ணஸ்வேச்சையே வேண்டுமாம்
தேசீய ஸர்க்கார் அமைப்பு

காந்தி வைஸ்ராய் ஸந்திப்பிற்குப் பிறகு சில நாளாக டில்லியில் நடந்த காங்கிரஸ் கார்யக்கமிட்டியானது. முடிவாக ஒரு தீர்மானத்தைச் செய்திருக்கிறது. இந்தியாவிற்கு பூர்ணஸ்வேச்சை கொடுப்பதாக உடனே வெளியிடவேண்டும். அதன் பூர்வங்கமாக மத்யகவர்ன்மெண்டில் தேசிய கவர்ன்மெண்ட் அமைக்கப்படவேண்டும் அது சட்டஸபையின் நன்மதிப்பிற்கு பாத்திரமாயிருக்க வேண்டும்.

மாகாணங்களில் நல்லஜவாப்தாரி ஸர்க்கார் அமைக்கப்படவேணும். இப்படிச் செய்தால் யுத்தத்திற்கு பூர்ண உதவி செய்ய காங்கிரஸ் முன்வரும்.

கார்யக் கமிட்டியிலிந்து காபர்கான் ராஜிநாமா செய்து விட்டார்.

வாரக்குறிப்புகள்

ஸ்ரீவத்ஸ. வே. ஸோ. சர்மா

இது ஓர் தந்த்ரமே! காந்திஜீ அவர்கள் கூறும் அஹிம்ஸா தர்மத்தில் மூழ்கி கிடந்த கார்ய கமிட்டி திடீரென அஹிம்ஸையில் நம்பிக்கை இழக்க காரணமென்ன? ஹிட்லரை அஹிம்ஸையால் ஜயிக்க முடியாதென கருதுகிறார்களா?

விலகுவதே மேல்! சென்னை மேயரை பலர் பிராமணர் என்ற காரணத்தாலேயே அவமதிக்கின்றனர். பதவி ஏற்புக்காக உழைத்த அவருக்கு ஓர் பதவியும் கொடுக்கவில்லை. ஆதலின் அதைவிட்டு விலகி ஸநாதன தர்மத்திற்கு உழைத்தால் நற்கதிசித்தம்! நற்பெயருமுண்டாம்!

நெல்லை ஸத்யாக்ரஹ கமிட்டி! அஹிம்ஸா தர்மத்தைக் கைக்கொண்டு பிரிட்டிஷ் அரசாங்கத்தை எதிர்த்து ஸ்வராஜ்யம் ஸம்பாதிக்கும் ஷை கமிட்டி வாயில் வந்தபடி வசைமொழிகள் கூறி மினிட் புஸ்தகத்தை தூக்கியது மிகக்கேவலமான செயலன்றோ?

அதிகப்படிப்பு

முன் காலத்திய படிப்புக்கும் இக்காலத்திய படிப்புக்கும் ஏராளமான வித்யாஸம் தென்படுகிறது. முன் காலத்திய படிப்பு ஆழ்ந்த அறிவைப் பயன்றதாகவும், இக்காலத்திய படிப்பு நுனிப்புல் மேய்வதுபோல் வெகு ஸ்தூலமாயும் காணப்படுகிறது. இதற்குக் காரணம் என்னவென்று ஆலோசிக்கும்போது, தற்காலத்திய பள்ளிக்கூடத்தின் படிப்பு வெகுவாய் மாறியிருப்பது தான் என்பது நிச்சயமாய் தெரியவருகிறது இப்போது கீழ் வகுப்பில் படிக்கும் மாணுக்கர்களுக்குக் கொடுக்கப்படும் புஸ்தகங்கள் அவர்களால் சுமக்க முடியாமல் கூலியாள் வைத்துக்கொண்டு போக வேண்டியிருக்கின்றன. இப்படி அதிக சுமை சுமறுவது, படிப்பவரின் நன்மையைக் கருதி ஏற்படுத்தப்பட்டிருப்பதாய்த் தெரியவில்லே. புத்தகாசிரியர்களுக்கோ, பதிப்பித்தவர்களுக்கோ, வியாபார முறையில் நன்மை உண்டாக்கப்படுகிறது என்பது நிச்சயம். உலகத்தில் எண்ணிறந்த நூற்கள் அறிவாளிகளால் இயற்றப்பட்டால் அவையெல்லாம் சிறுவர் படிக்கவேணுமென்று ஆசைப்படுவது முற்றும் தவறு. சிறுவர்களுக்கு, ஏதோ சிற்சில முக்கியமாயும் சுலபமாயுமிருக்கிற புஸ்தகங்களில் மாத்திரம் அறிவையூட்டி, அவற்றில் ஆதியோடந்தம் பரீக்ஷை செய்து, சிறப்புற்ற தேர்ச்சியை உண்டாக்கி மற்ற நூற்களே அவர் தன்னுடைய அறிவைக்கொண்டு தானே படிக்கும்படி செய்யவேணும். இந்த ஏற்பாட்டினுல் மாணுக்கருடைய புத்தி கூர்மையடைந்து உற்சாகத்துடனும் குதூஹலத்துடனும் புதிய புதிய புஸ்தகங்களே படிப்பது எளிதாகும். இதுவே பழைய காலத்து முறை. இதற்கு நிதர்சனமாக வேதத்தில் உபாக்யானமொன்றுண்டு.

பரத்வாஜர் என்ற ரிஷி வேதமோதத் தொடங்கினுர், அவருக்கு எல்லா வேதங்களேயும் ஸாங்கமாக அத்யயனம் செய்த பிறகே ஸமாவர்த்தனம் செய்யவேணும் என்ற எண்ணம் உதித்தது. அதற்கு ஜீவித காலம் போதாதென்று கருதி, இந்திரனே மூன்று வேதங்களேயும் முழுவதும் ஒத மூன்று புருஷாயுஸ் அதாவது 300 வருஷங்கள் ஜீவித்திருக்கும்படி வரன் தரவேணும் என்று கேட்டார். இந்திரனும் அவ்விதமே கொடுத்தான். 300 வருஷம் வேதம் கற்ருர். வேதம் முடிந்தபாடில்லே. இந்திரன் தானுகவே வந்து தோன்றி. 'நான் உமக்கு நானகாவது புருஷாயுஸ் கொடுத்தால் என்ன செய்வீர்?' என்று கேட்டான். வேதாத்யயனமே செய்வேன் என்ருர். அதற்குப்பின் இந்திரன் இவருடைய வீண் பிடிவாதத்தைப் போக்க ஒரு உபாயம் செய்தார். அதாவது மாயையினுல் மூன்று பெரிய மலேகளே பரத்வாஜர் முன்தோன்றச் செய்தான். ஒவ்வொரு மலேயிலிருந்தும் ஒவ்வொரு முஷ்டி மண் எடுத்து அவர் முன்னே வைத்தான். பரத்வாஜரே! இவை என்னவென்று அறிவீரா? மூன்று மலேகளும் மூன்று வேதங்களாம். அவற்றில் நான் எடுத்து வைத்த பிடிமண் நீர் இதுவரை அத்யயனம் செய்த பாகத்தைக் குறிக்கும். இனி அத்யயனம் செய்யவேண்டியது மலே மலேயாய் இருக்கிறது. ஆகையால் இந்த பிடிவாதத்தை விட்டு விடும். இதற்கும் ஸாராம்சமான வித்தையை கிரஹித்துக்கொண்டு ஓய்ந்து விடுவதே நலம் என்ருன். பரத்வாஜரும் ஸாவித்ரம் என்ற மந்த்ர பாகத்தை அத்யயனம் செய்து கிருதார்த்தரானுர் என்று.

ஆகையால் அவரவர் நோக்கத்துக்குத் தக்கபடி ஸாரமான கிரந்தங்களேப் படித்து முடிப்பதே புத்திசாலிகளின் கார்யமாகும்.

(வேதி)

ஆலயப்ரவேச தின கண்டனக் கூட்டம்

சென்னே

சென்னே முத்யால்பேட்டை வர்ணாச்ரம வஸ்ராஜ்யஸங்கம் அமரகலாவிலாஸினி இலவகளாதரவில் 8உ காலே பிரும்மஸ்ரீ ஸ்ரீவத்ஸ வெ. சோமதேவசர்மா தலேமையில் ஓர் ஊர்வலம் கிருஷ்ணன் ஆலயத்திலிருந்து கிளம்பி நான்கு வீதிகள் வந்து அங்கேயே முடிந்தது பலமாணவர் உத்ஸாஹமாக அதில் கலந்து கொண்டனர்.

மாலேயில் 4½ மணிக்கு ஸ்ரீ சங்கர மடத்தில் பிரும்மஸ்ரீ ஸ்ரீவத்ஸ சோமதேவசர்மா தலேமையில் ஜோஸ்யர் ஸ்ரீரங்கம் ரங்கசாமி அய்யங்கார் பாலக்காட் சுப்ரமண்யசாஸ்திரிகள் நாட்டு நாராயணராவ் சண்டாள ஜாதி தத்வ நூலாசிரியாள் தேசிகர் முதலிய பற்பல வித்வான்கள் பேசி அச்சட்டத்தைக் கண்டித்து அதை அகற்றிபோரில் வெற்றியடையும்படி அரசாங்கத்தை வேண்டி ஓர் தீர்மானம் செய்தது இரவு 8 மணிக்கு ஸபை வந்தேனுபசாரத்துடன் கலேந்தது.

ந. நிரூபர்.

தர்ம ஸம்ரக்ஷண வாலிபர் சங்கம் இராமேஸ்வரம்

1940-ஸ்ரீ ஜுலே-மீ 1-உ ஸோமவாரம் ஏகாதசி யன்று இரவு 7½மணிக்கு ஷை சங்க காரியாலயத்தில் இவ்வூர் பஞ்சாயத்து கோர்ட்டிலும் இன்னும் இதர பொது ஸ்தாபனங்களிலும் (மாஜி] தலேவராகவே இருந்து வந்த வரும் முக்கிய பிரபலஸ்தருமான ஸ்ரீ பக்ஷிலெக்ஷ்மன சாஸ்திரியார் அவர்கள் அக்கிராஸனத்தில். ஷை விழா குருகீர்த்தனே வாழ்த்து கீதங்களுடன் ஆரம்பமாயிற்று.

ஆரம்பத்தில் ஷை சங்கம் நிர்மாணத்திட்டக் கமிட்டி தலேவர் ஸ்ரீ எஸ் சுந்தரராமய்யர் அவர்கள் ஜீவவார ஏகாதசி மாஹாத்மயம் என்னும் புண்ணிய புராணத்தை ஸ்ரீ பிச்சு ராமலிங்க சாஸ்திரியும் அவர்கள் உபந்நியாஸிப்பார் என்றும் முக்கியமாக எல்லா ஊர்களிலும் ஸனுதன யுவர்கள் ஒன்றுபட்டு தார்மீக யுவர் சங்கங்கள் ஸ்தாபித்து அதன் மூலம் பிரசாரங்கள் செய்து தார்மீகத்தை காப்பாற்ற முன்வர வேண்டுமென்றும் ஷை சங்கத்தைப் பலப்படுத்த ஷை சங்க அங்கத்தினர்கள் எல்லோரும் அங்கத்தினர்களே ஜாதியாய் சேர்ப்பதற்கு முயற்சி செய்ய வேண்டுமென்று சங்கத்திற்கு வேண்டிய ஒத்தாசைகள் செய்ய கும்பகோணம் ஜகத்குரு ஸ்ரீசங்கராசார்ய ஸ்வாமிகளுடைய கிருபைபூர்ணமாய் இருக்கின்றன தென்றும் கூறிய பின் அக்கிராஸனர் முன்னுரை பிரசங்கம் செய்தும் அதன் பின் ஷை மஹாத்மயத்தை ஸ்ரீ பிச்சு ராமலிங்க சாஸ்திரியார் அவர்கள் உபன்யாசிக்கும் பொழுது. குறிப்பாக சுக்லபக்ஷகுருவாரத்தில் வரக்கூடிய ஏகாதசி தான் முக்கியமென்றும் சரியான சாஸ்திர சம்மந்தமான ஆதாரங்களே எடுத்துசொல்லி 1மணி நேரம் வரை உபன்யசித்தார். மேலும் ஸ்ரீ ஹரிதாஸ் ஸ்ரீசிவான பாகவதர் அவர்களும் ஸ்ரீ மு. வ. சேஷசாஸ்திரியார் அவர்களும் சங்கத்தின் சட்ட திட்டத்தின்படி அங்கத்தினர்கள் ஒவ்வொருவரும் செய்ய வேண்டிய கடமையைப் பற்றி 1 மணி நேரம் வரை பேசிய பின் சங்கத்தலேவர் ஸ்ரீ மு. வ. கோபால சாஸ்திரியார் அவர்கள் சங்கத்தின் அபிவிர்த்தியைப் பற்றி பேசியும் தலேவர்களுக்கும் பொது ஜனங்களுக்கும் வந்தனேபசாரம் கூறியதும் விழா இனிது முடிந்தது.

எஸ். சுந்தரராமய்யர்

பிரிட்டன் யுத்தத்தில் வெற்றி பெறவேண்டும்.

ஹிந்துக்கள் மத உரிமையுடன் வாழவேண்டும்.

வைஸ்ராய்க்கு ஸ்ரீ நடேசய்யர் விண்ணப்பம்

ஸனுதன தலேவரான மதுரை ராவ்சாகிப் நடேசய்யர் பின்கண்ட விண்ணப்பத்தை மே. த வைஸ்ராய்க்கு அனுப்பி இருக்கிறர்

"என் மதத்தில் தீவ்ர பக்தியுடையவனுகவும், வயதானவன் என் கிற முறையிலும் இக்கடிதத்தை நான் எழுதுகிறேன். நான் ஒரு ராஜ பக்தியுள்ள ஹிந்துபிரஜை நான் பிரிட்டிஷ் ஆட்சி சிரந்தரமாய் நீடிக்கவேண்டுமென்று பிரார்த்திப்பவன். நான் இதுவரை இல்லாத கண்ணீருடனும், புண்ணுன மனதுடனும் இதை எழுதுகிறேன். இதை எழுதும்போதே ஜர்மன் விமானங்கள், பிரிடனில் குண்டு போடும் துக்கத்தை தரும் சேதியானது என் காதில் விழுகிறது. அச்செய்திகளானது முழுப் பொய்யாகவும், திரித்ததாகவும், இருக்கக்கூடாதா என்று நான் மனமார விரும்புகிறேன்.

2. நான் எழுதுவது உணர்ச்சியின் வேகதினுல் அல்ல, நான் சொல்வது 20 கோடி ஹிந்துகளின் அபிப்பிராயமாகும்.

3. ஜாதி மதம் பேதமில்லாமல் எல்லோருடைய பிரார்த்தனேயும் பிரிட்டன் ஜெயிப்பதை குறித்தே செய்கிறது. பழைய காலில் ஸ்ரீ ராமர் பல்லாயிரக்கணக்கான எதிரிகளே ஜெயித்தமாதிரி, பாண்டவர்கள் தங்களது விரோதிகளே முறியடித்தமாதிரி பிரிட்டனும் கடைசியில் ஜயிப்பது நிச்சயம். அவ்வெற்றி சீக்கிரமே வரவேண்டுமானுல், ஹிந்துக்கள் தங்களது பிரார்த்தனே ஸ்தலமாகிய கோவில்களில் தங்களது பிராசீன ஸம்பிரதாயப்படி தொழ பூரண சுதந்திரம் கொடுக்கவேண்டும். பிரார்த்தனே என்பது ஒரு பெரிய ஸாதன சக்தியாகும். பிரார்த்தனேயின் பலன்களே தெரியாதார் இல்லே. பிரார்த்தனேயால் பல பேராச்சர்யங்கள் நிகழ்ந்திருப்பது சரித்திர சான்று, அற்புதங்கள் நடந்த காலம் மறையவில்லேயே; ஒருக்காலும் மறையாது. ஹிந்துக்கள் தங்களது கோவில்களில் முறைப்படி ஆராதித்தால் தான் கோரிய பலனே பெறுவது சாத்தியமாகும். ஆதலால் சென்றவருஷம் நடந்த அக்கிரமமான ஆலயப்பிரவேசத்தால் ஏற்பட்ட தீட்டை உடனே போக்கவேண்டும். ஆலயப்பிரவேச சட்டத்தை ரத்து செய்தாவது, மாற்றியாவது கோவிலுக்கு மஹா கும்பாபிஷேகம் செய்தால் தான் தீட்டும் அசுத்தமும் அகலும். இந்திய அரசியல் சட்டப்படியும் இந்திய பாதுகாப்பு சட்டப்படிக்கும், தங்களுக்கு யுத்தகால ஒரு நிலேமைக்கு, அம்மாதிரி செய்வதற்கு பூர்ண அதிகாரமுண்டு.

8—7—40 அன்று அநீதியான ஆலயப்பிரவேசம் நடந்து ஒரு வருஷமாகிறது. பிரிடன் யுத்தத்தில் ஜயம் பெறவேண்டுமாயின் கோவில்களில் சுத்தி கிரியைகள் செய்து, அவைகளில் பிரார்த்தனே செய்வது அவச்யம் என்பதை நான் 20 கோடி ஹிந்துக்கள் சார்பாக வற்புறுத்துகிறேன். சோதனேக்காகவாவது ஒருமுறை கருணே கூர்ந்து எங்களதுவேண்டுகோளுக்கு இரங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். மதத்துக்காகவும், உண்மையை தாங்குவதற்காகவும், பிரிட்டன் சரித்திரத்தின் சிறந்த அம்சங்களின் பெயராலும், ஆயிரக்கணக்கான ஸனுதனிகளின். சார்பாகவும் தாங்கள்மனமுவந்து, கோவில்கள் பழையஸான்னித்யம் பெறவேண்டுவதற்கான அவச்யமானகிரியைகள்செய்வதற்கு உத்திரவு கொடுக்கும்படி வேண்டுகிறேன்

இந்திய தேசிய விஷயங்கள்.

(சென்ற வாரத் தொடர்ச்சி)

மற்றென்று மதுவிலக்கு. அதன் அவசியத்தை யாரும் ஆக்ஷேபிக்க வில்லை. ஆயினும் வேலையில் இருந்தவர்களையும் வேலையின்றி செய்து விடுவதால் அன்யர்களின் ஆதிக்யம் அதிகப்படுகிறதே! வேலையை அளிக்க முடியாத ஸ்திதியில், கிடைத்த வேலையையும் பசியும் கவலையும் மறந்து வாழ அவகாசம் அளிக்காமல் மதுபானத்தைமட்டில் அகற்றுவது அழகன்று. ஸர்க்காரின் வரும்படி குறையவேண்டு மென்று செய்து வந்தவரையில் இது ஸரி தான். ஆனால் தேச நிர்மாணமாகாது.

கல்வி விஷயமோ; நமது குழந்தைகள் அன்ய பாஷையில் பயின்று அன்ய ஆதிக்யத்துக்கு உதவி செய்து வருவது வியஸனிக்கத்தக்கதே; ஆயினும் என் அப்படி? உணவு தேடவே அன்ய கல்விகற்கிறோம். நமது நாட்டில் நம்தொழில்கள் அபிவிருத்தி அடையாமல் செய்து கொண்டோம். நமது தொழிற்களை விருத்தி செய்து கொள்ளாமல் கலைகளைமட்டில் விருத்தி செய்து கொண்டு விடமுடியுமா? நமது தேசத்துக்கு வேண்டிய தொழிற்களை நாமே நடத்த வேண்டும். அதற்கு அனுகூலமான கல்வியும் வேலையும் கற்பிக்கவேண்டும். அது வரையில் ஆங்கிலக் கல்வியும் க்ளார்க் வேலையும் தான். ஏதோ சில பள்ளிக்கூடங்களில் நூல் நூற்ககற்றுக் கொடுத்து விடுவதால் மட்டில் ஸ்வதேசக் கல்வி புகட்டப் பட்டதாலாவது ஸ்வதேசிய கல்விச் சாலைகளாக மாறி விடுமோ?

தீண்டாமை விலக்கு

மற்றென்று:— தீண்டாமை விலக்கு. ஒரு ஜாதியினரை ஹீனமாகக் கருதி அவர்களுக்கு யாதொரு உரிமைகளையும் அளிக்காமல் இருப்பது அந்யாயம் தான். ஆனால் தீண்டாமை விஷயம் அதுவா? யாவருமே தாழ்த்தப் பட்டவர்கள் தான் இந்தியாவில் இப்பொழுது ஒரு வகுப்பினரை மட்டில் தூக்கி விடமுடியுமா? தூக்கி விடுவதனால் தான் தாழ்மை நீங்குமா? அதிகமாக கூலி கொடுக்க சக்தி உண்டு பண்ணிக் கொள்வதனால் தான் இது தீரும். தீண்டாமையில் யாதொரு தவறும் இல்லை. ஒருவரையும் மற்றவர் தொட வேண்டியதில்லை. தொட்டுக் கொள்வதால் ஒற்றுமை அதிகரிப்பதில்லை. தொடாததால் குறைவதில்லை. தீண்டாமை அறியாத ஸமூகங்களிலும் ஒற்றுமை குறைவு உண்டு. தீண்டாமை நமது நாட்டில் இப்போது குறைந்தும் ஒற்றுமை அதிகரிக்க வில்லை. வேறு த்வேஷங்கள் தான் விருத்தி ஆகி இருக்கின்றன. தேசீய உணர்ச்சி உண்டாகி தேசத்தின் ஒவ்வொரு அங்கங்களும் பரஸ்பரம் ஒத்துழைக்கமுற்பட்டு, ஒருவர் தேவைகளை மற்றவர் பூர்த்தி செய்யத்தான் ஓர் ஸமூகமாக இருக்கிறோம் என்கிற அறிவு ஏற்படுவதால் தான் இந்த பிரசனை தீரும்.

ஹிந்து முஸ்லீம் ஒற்றுமை. சிரத்தையால் ஏற்படும் ஒற்றுமை தான் சாச்வத ஒற்றுமை. மற்றவைகள் தாத்காலிகமானவைகளே. இருவகுப்பினருமே இப்பொழுது கூலிகளாக வாழ்கின்றோம். செல்வ நிலை அதிகரிக்க வில்லை. ஒற்றுமை மட்டில் வளருமா? அன்ய ஸர்காரை ஒழிக்க வேண்டுமே என்று தாத்காலிகமாக சேர்ந்து கொள்வதால் ஒற்றுமை ஏற்பட்டு விடாது. ஹிந்துக்களுக்குள்ளாகவே ஒற்றுமை ஏற்படாத நிலைமையில் முஸ்லீம்களுடன் ஹிந்துக்களுக்கு ஒற்றுமை எப்படி ஏற்படும்? ஸ்வயராஜ்யம் அடைந்தால் தான் ஒற்றுமையையும் அடையலாம். அதாவது வெள்ளையருக்கு பதிலாக இந்தியர்கள் அரசாள்வது என்பதல்ல. நமது தேசத்துக்கு வேண்டியவைகளை நாமே உத்பத்தி செய்து கொண்டு, நமது ஜனங்களை நாமே நம்வேலையில் உபயோகித்துக் கொண்டு அன்ய நாடுகளுடன் ஸமான நிலையில் வியாபாரம் செய்து வருவதேயாகும்.

ஹை "ஹேதவே இஷத் பலேதுன" என்பார்கள். நமது தாழ்மைக்கு காரணம் தெரிந்து கொண்டால் நமது முன் ஏற்றத்துக்கு வழியையும் தெரிந்து கொண்டு விடலாம். அப்படி அறிந்து இந்திய தேசிய நிர்மாணத்துக்காக ஏற்படுத்தப் பட்ட திட்டம் காந்ஜியின் திட்டம்.

காந்திஜி தேசத்தலைவர் மட்டில்லை. புதிய தேசியத்தின் கர்த்தா, இந்தியா இந்தியாவாகவே ஆகவேண்டு மென்று பாடுபடுகிற மஹாத்மா. லார்ட்மெஸ்டன் பயப்படுவது போல் மேல்நாட்டு நாகரீகத்தை இந்தியாவை விட்டு துரத்தவே முயற்சிப்பவர்கள் காந்திஜீ. ஆம். உலகத்தில் அமைதி ப விச் சாச்வதமாக நிலைநிற்கவேண்டுமானல் மேல் தேசத்திய நாகரீகம் ஒழிய வேண்டியது தான். ஓர் தேசம் மற்றொரு தேசத்தோடு போர் செய்து வாழ்வதும், ஓர் வகுப்பினர் மற்றொரு வகுப்பினருடன் போர் புரிந்து வாழ்வதும், ஸ்திரீகள் புருஷர்களுடன் போட்டி இட்டு வாழ்வதையும் அடிப்படையாகக்கொண்ட நாகரீகம் மேல் தேச நாகரீகம். அதை அகற்ற அவர் படும் பாடு ராஜத்வேஷமாயினும் நியாய விரோதமாகாது. அவர் ஏற்கனவே ஆரம்பித்து வெற்றி அடையாதபோனாலும் நமது விச்வாசத்துப் பாத்திரமேயாவார். அவர் வெற்றி அடையாதது நாம் அவரை ஸரியாக புரிந்துகொண்டு ஒத்துழைக்காததால் தான்.

ஆயினும் முன்பு ஆரம்பித்த இயக்கம் ஸர்க்காரை திகைக்கச் செய்வதற்காக மட்டில், சிறிதுகாலத்துக்கு மட்டில் அனுஷ்டிப்பது என்ற நோக்கத்துடன் ஆரம்பிக்கப் பட்டது. இப்பொழுது தேச நிர்மாணமே நோக்கம். புனர் நிர்மாணமல்ல. சீர்திருத்தி நமது தேசத்துக்கு ஒத்த முறையில் அமைப்பது. நாம் தாழ்மை அடைந்ததற்கு என்ன காரணம் என்று தெரிந்து கொள்வதும் மறுபடியும் மேலே கிளம்ப மார்க்கமும் புலப்படும். ஆயுத பலத்தால் மட்டில் நாம் அபஜயம் அடைந்து அடிமை ஆகி விடவில்லை. அன்ய தேச ஆசாரங்களையும் பாஷைகளையும் வாழ்க்கை முறைகளையும் ஆதரித்து அன்ய உடைகளையும் அன்ய பண்டங்களை வாங்க ஆரம்பித்ததிலிருந்து நமது தொழிற்களும் பொருள்களும் வீணாயின தொழிலை இழந்தவர்கள் இதர தொழிற்களில் பிரவேசிக்கவே ஸாங்கர்யமும் அவ்யவஸ்தையும் தலைப்பட்டு யாவரும் அன்யர்களுக்கு அடிமைப்பட்டு கிடைக்கும் உத்யோகத்துக்கு போட்டி போடலாயினர். அன்ய தொழிற்சாலைகளில் கூலிகளாகி தன்மதிப்பு இழந்து தவிக்கலாயினர். கொஞ்சம் கொஞ்சமாக வீர்யமும் உத்ஸாகமும் குன்றி பரிதவிக்கனுற்றோம். இவை யாவையும் மாற்றிக்கொள்ளவேண்டும். அதற்காக நாம் செய்யவேண்டியன.

தேசீய அபிவிருத்தி வழிகள்

1. நமது மதத்தை இழந்து அன்னிய மதத்தை ஏற்றுக் கொள்ளும் வழக்கத்தை விட்டு ஒழிக்கவேண்டும். 2. நமது இலக்கியங்களையும் நமது பாஷைகளையும் பயின்று அபிவ்ருத்தி செய்யவேண்டும். 3. நமது தேசீய ஸ்தாபன முறைகளை புறக்கணித்து அன்ய ஸ்தாபனங்களை ஆதரிக்கும் பழக்கத்தை விட்டுவிட வேண்டும். 4. நமது நாட்டு ஸாமான்களையே வாங்கி உபயோகிக்க வேண்டும். 5 பிறர் பொருளை இந்நாட்டில் நாம் விற்று ஸம்பாதிப்பதை நிறுத்த வேண்டும். 6. அந்ய தேச ரயில் பாதை முதலிய பிரயாண வஸதிகளை உபயோகிப்பதை கூடியவரையில் குறைத்து நம் நாட்டு வசதிகளையே ஆதரிக்கவேண்டும், 7. அந்யநாட்டு வியாபார தொழிற் முறைகளை பின் பற்றுமல் கிராம தொழிற்களுக்கு வஸதி அளிக்க வேண்டும். 8 நம் அக்கரைக்கேவிரோதமாக நமது பணமே அன்யர்களால் (இன்ஷ்யூரன்ஸ், டிபாஸிட் முதலியவைகள் மூலம்) உபயோகப்படுத்தப்படுவதை நிறுத்தவேண்டும். 9. அந்யநாட்டு வியவஸாய முறைகளை அனுஷ்டிக்கக்கூடாது. 10. நமது நாட்டு ஜனங்கள் கஷ்டப்படுவதற்கு மூலகாரணமான நமது வியாபாரத்தை பிறரிடம் ஒப்புவித்தலை நிறுத்த வேண்டும். பிறருக்கு நமது நிலங்களை பராதீனம் செய்யக்கூடாது.

இப்படி அனுஷ்டித்து வந்தால் பொருளதார நிலைமை சீர்படும். ஒவ்வொரு கிராமமாகச்சென்று புள்ளி விவரங்கள் தயாரித்து அந்தந்த கிராமங்கள் புதிய தொழிற்கள் என்ன ஏற்படுத்தலாம் எந்த தொழிலின் உத்பத்திப் பொருள்களுக்கு கிராக்கி இருக்கிறது என்று அறிந்து கொள்ளலாம். ஒவ்வொரு கிராமமும் பஞ்சாயத்தைசீர்திருத்தி அழைத்துக்கொண்டு, ஸ்வய ஆக்ஷி புரிய தலைப்பட ஹேதுவாகும். ஓர் கிராமம் மற்றொரு கிராமத்துக்கு தன் விளைபொருள்களை கொடுத்து உதவியும் அதனால் தன் தேவையை பூர்த்தி செய்து கொள்ளவும் இயலும். இதுதான் தேச நிர்மாணம் என்பது. தானுகவே ஸ்வயராஜ்யம் அடைய இதுதான் மார்கம். ஆங்கில ஸர்க்காரும் ஆக்ஷேபிக்க முடியாது. 'இந்திய தேசியம்' என்பது ஸார்தகமாகும்.

—— இந்தியன் திங்கர்.

"அறஞ்செய விரும்பு"

A இராமரத்தினம் அய்யர் B. A. L L. B.
திருச்சி

அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு வித புருஷார்த்தங்களில், அறத்தை குறித்து அதையே பிரதான்யமாய் செய விரும்பு என்று நம் ஔவை பிராட்டியார் வற்புறுத்துவதின் காரணத்தைப் பற்றி ஆராய்வோம். அறம், பொருள், இன்பம், வீடு என்பதில் அறத்தை மட்டுமே கைப்பிடித்தால் மற்ற புருஷார்த்தங்கள் சித்திக்கும் என்று ஏற்கனவே ஒரு இதழில் காட்டப்பட்டிருக்கிறது. இந்த வுலகத்தில் சகல பிராணிகளும் விரும்புவது சுகம் என்னும் இன்பம் என்பதையே தான். இந்த சுகம் அர்த்தத்தாலும் காமத்தாலும் ஏற்பட்டாலும் வீடு என்னும் புருஷார்த்தம், பரலோகத்தில் அனுபவிக்கக்கூடிய ஆனந்தம் அர்த்தத்தாலோ, காமத்தாலோ அல்ல. அதற்குத்தர்மம் தான் காரணம். இகலோக சுகங்களுக்கு அர்த்தமும் காமமும் காரணங்களானாலும் பரலோகசுகத்துக்கு தர்மம்தான் காரணம். இந்த அறத்தோடு பொருந்திவருவதே யின்பம். அதனோடு பொருந்தாது வருவன எல்லாம் துன்பம் தருவனவாகுமென்பதை, தெய்வப்புலமை வாய்ந்த திருவள்ளுவநாயனாரும் "அறத்தான் வருவதேயின்பம் மற்றெல்லாம் புறத்தே புகழும் இல"
என்று கூறியிருப்பது கவனிக்கத் தக்கது.

இதுபற்றியே திருவள்ளுவர் அறன் வலியுறுத்தல் என்னும் அதிகாரத்தின் கீழ், அறத்தின் சிறப்பைப்பற்றி கூறியிருப்பதை அடியில் கண்ட செய்யுளால் பெரியோரும் கூறியிருக்கின்றனர்.

(தொடர்ச்சி 8ம் பார்க்க)

உ

ஸ்ரீகாஞ்சீ காமகோடி பீடாதிபதி ஜெகத்குரு ஸ்ரீசங்கராசார்ய ஸ்வாமிகள் அவர்கள் ஸ்ரீ மடம் சிஷ்யகோடிகளுக்குக் கொடுத்த

ஆக்ஞா ஸ்ரீமுகம் பிரகாரம்.

திருவாரூர்

ஸ்ரீ தியாகராஜப்பெருமானுக்கும்

ஸ்ரீவல்மிகநாதர் முதல் பஞ்சமூர்த்திகளுக்கும்

136 குடம் கங்காதீர்த்தம் பிரயாகையிலிருந்து தருவித்து மஹாஅபிஷேகத்தை நாளது விக்ரமஹு ஆனிமீ 22உ (5—7—40) முதல் ஆனிமீ 32உதேதி (15—7—40) ஸோமவாரம் முடிய, 136 வைதீகர்களைகொண்டு ஸ்ரீமஹா ருத்ர பாராயணம் செய்வித்து தக்ஷிணயனபுண்யகாலம் ஸமயம் அபிஷேகம் செய்விப்பதென்றும் இந்த 12 நாளிலும் அன்னதானம் செய்வதென்றும் தீர்மானித்திருப்பதாலும், இந்த கைங்கர்யமானது மஹாஜனங்களின் க்ஷேமத்தையும் துர்பிக்ஷம் நீங்கவும், ராஜாங்க க்ஷேமத்தையும் உத்தேசித்து நடத்தப்படுகிறது. இந்தவிதமான கைங்கர்யம் இதற்கு முன் ஒருபோதும் நடந்ததாகக்காணப்படவில்லை. ஒருசமயம் இராஜாக்களால் நடத்திவைக்கப்பட்டிருக்கலாமோ தெரியவில்லை இதற்கு ஏராளமான பொருள் தேவை என்பது யாவருக்கும் தெரிந்த விஷயமே தர்மம் என்பது கேட்டும், கேளாமல்தானாகவே செய்ய முன்வருவதே சுத்தமான தர்மமென்பது எல்லோரும் அறிந்த விஷயம். ஜெகத்தில் தர்மிஷ்டர்கள் ஏராளம் ஒவ்வொருவரையும் அணுகி நேரில் போய் தெரிவித்து கேட்பதென்பது சிரமமான கார்யம் ஆகையால் கேளாமல் செய்வதே உத்தமம் மென்பதைஅனுஸரித்து தங்களால் இயன்றதை பணமாகவோ அன்னதானத்துக்குரியஸ மக்கிரியைகளாகவோ அடியில்கண்ட விலாசத்துக்கு நேரிலோ மனுஷியாள மணிஆர்டர் மூலமாகவோ அனுப்பியும் கூட இருந்து இந்த தர்மதை நடத்திவைத்து கிருதார்த்தர்களாகவும் இசுவர அனுக்ரஹத்தை அடையவேணுமாய் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

விலாஸம்

பழனிசிவன்,
9நெ. ஸன்னதித் தெரு திருவாரூர். S.I.R.

அறஞ்செய விரும்பு

(தொடர்ச்சி 7ம் பார்க்க)

"அறமது, மும்மையும் நல்குவதாலே
யனைத்துயிர்க்கும்
உறுதுணையாம் அஃதொல்லும வகையா
றெழிவின்றியுள்
மறுவிலனாகவு ஒற்றுக வென்றருள்
வள்ளுவன்சீர்
நறுமலர் சேவடி யென்னுளஞ் சென்னி
யினற்குறவே"

ஒருவனுக்கு அறஞ் செய்தலின் மேற்பட்ட ஆக்கமுமில்லை. அதனை மயக்கத்தால் மறந்துவிடுதலின் மேற்பட்ட கேடுமில்லை.

"அறத்தினூஉங் காக்கமுமில்லை. யதனை மறத்தலினூங்கில்லை கேடு"

இவ்வுலகத்தில் சுகத்தை அடைவதற்கு தர்மமும், அர்த்தமும் காமமும் வேண்டுமென்று தோன்றினாலும் உண்மையில் நன்ருய் ஆராயுமிடத்து, தர்மமென்ற ஒரு புண்யம் இருந்தாலே போதும். அதற்குள்ளேயே அறம் பொருள் இன்பம் என்ற இம் மூன்றும் அடங்கிவிடும். தர்மத்தால் அர்த்த காமங்கள் அடங்கி விடும். ஆனல் அர்த்த காமங்களுக்குள் தர்மம் அடங்காது. ஆதலால் தர்மம் ஒன்றையே சரணமடைய வேண்டும். அறத்தின் சிறப்பைப்பற்றி முனைப்பாடியார் அறநெறிச்சாரத்தில்

"தனக்குத்துணையாகி தன்னை விளக்கி
இனத்துள் இறைமையுஞ் செய்து
மனக்கினிய
போகந்தருதலால் பொன்னே அறத்
துணையோடு
ஏகமா நண்பொன்றும் இல்"

நம் வாழ் நாட்களுக்கு அறத்தைப் போல் உறுதி பயப்பன வேருென்றும் இல்லை. அதையே கைப்பற்றவேண்டுமென்று கம்பநாட்டாழ்வாரும் ஸ்ரீ ராமரும் சுக்கிரீவனுக்குப்பட்டம் கட்டுங் காலத்தில் அரசியற்நீதி உரைக்கும் காலத்தில், உபதேசம் செய்யும் செய்யுள்களால் அறியலாம்.

"இறத்தலும், பிறத்தலும் தானும் என்
பன இரண்டும் யாண்டும்
திறத்துளி நோக்கிற் செய்த வினைதரத்
தெரிந்தவன்றே
புறத்தினயுரைப்ப தென்னே பூவின்
மேற்புனிதற்கேனும்
அறத்தின திறுதி வாழ்நாட் கிறுதியஃ
துறுதியென்ப"

"ஆக்கமும்கேடும்தாஞ்செயறத்தொடு
பாவமாய்
போக்கி வேறுண்மை தேருர், பொரு
வரும் புலமை நாலோர்
தாக்கின வொன்ருேடொன்று தருக்
குறஞ் செருவிற்றக்கோய்
பாக்கியமன்றி யொன்றும் பாவத்தை
பற்றலாமோ"

பெறுதற்கரிய பிறவியைப்பெற்ற மானிடர்கள் தர்மத்தையே கைகொள்ள வேண்டும். அதுவே உயிருக்குற்றதுணை என்பதை

"அரும் பெறல் யாக்கையைப் பெற்ற
பயத்தாற்
பெரும் பயனுமாற்றவே கொள்க கரும்
பூர்ந்த
சாறுபோற் சாலவும் பின்னுதவி மற்றுத்
தன்
கோதுபோற் போகுமுடம்பு" என்றும்

"தோற்றஞ்சான் ஞாயிறு நாழியாவை
கலும்
கூற்றமளந்து நுங்நாளுண்ணும் ஆற்ற
அறஞ் செய்தருளுடையீராகு மின்
யாரும்
பிறந்தும் பிறவாதாரில்"

இயமன் சூரியனைப்படியாக கொண்டு உங்கள் வாழ்நாளை யளந்து உண்ணுகிருன். ஆகையால் தர்மத்தைச்செய்து கிருபையடைவார்கள் என்றும் மனிதப் பிறப்பிற் பிறந்தும் அறஞ் செய்யாராகில் பிறவாதவர்களில்லவைத்தெண்ணப்படுவர் என்றும் நாலடியார் செய்யுள்களாலும் அறிக

இந்த அறமே நமக்கு மிக்கதுணையாவது என்பதை சீத்தலைச்சாத்தனரும் மணிமேகலையில்.

" இளமையும் நில்லா, யாக்கையும்
நில்லா
வளவியவான் பெருஞ்செல்வமும்
நில்லா
புத்தேள் உலகம் புதல்வரும் தாரார்
மிக்க அறமே விழுத்துணையாவது. தருமத்தைச் செய்து வாழ்தலே வாழ்வாகும். மற்றவை எல்லாம் பெரியபெட்டியை தாளிட்டதை ஒக்கும் நொறுங்காற்காய்ச் சப்பட்ட கூழை நிறைய குடித்து. விளங்குகின்ற இரண்டு கொம்புகளுடன் பன்றியும் வாழும்.

" நொறுங்கு பெய் தாக்கிய கூழார
வுண்டு
பிறங்கிரு கோட்டொடு பன்றியும்
வாழும்.
அறஞ்செய்து வாழ்வதே வாழ்கை
மற்றெல்லாம்
வெறும் கேளை தாழ்க்கொளீ
இயற்று"

என்றல்லவா கூறியிருக்கிருர்கள்.

பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் அர்ஜுனனக்கு எவ்வெப்பொழுது தர்மத்துக்கு குறைவும் அதர்மத்தின் அபிவிருத்தியும் உண்டாகிறதோ அப்போது நான் அவதரிக்கிறேன் சாதுக்களை ரக்ஷிக்கவும் துஷ்டர்களை சிக்ஷிக்கவும் தர்மத்தை நிலைநிறுத்தவும் யுகந்தோறும் அவதரிக்கிறேன். என்று உபதேசம் செய்திருப்பதையும் எண்ணுங்கால் தர்மத்துக்குத்தான் பிராதான்யம் கொடுக்கப்பட்டிருக்கிறது. என்பது விளங்கும்.

'அறநெறி நிறுத்த வந்த இறை' என்றும் அறத்தின் மூர்த்தி. என்றும் தர்மத்தின் தனிமூர்த்தி, என்றும் கம்பநாட்டாழ்வாரால் கொண்டாடப்படும் ஸ்ரீ ராமர் தான் தாயாகவே பாவித்து நடந்து வந்த கைகேயி அன்னை, சொன்ன வரன்களுக்கு உடன்பட்டு, வனத்துக்கு செல்வதற்கு முன்னல் தன் மனப்பான்மையை எப்படி வெளியிட்டு காட்டுகிருர். அம்மா ! நான் பொருளிற்பற்று வைத்து உலகத்தில் வஸிக்க இஷ்டப்படவில்லை என்னை ரிஷிகளுக்கு சமானவானும் தர்மம் ஒன்றிலேயே பற்றுவைத்தவனுமாகிய நீ தர்மத்தின் உயர்வையும் அதன் பெருமையும் அதையே சரணமடைய வேண்டுமென்று பெரியோர்கள் வற்புறுத்துவதன் தத்துவத்தையும் ஸ்ரீமத் வால்மீகி ராமாயணத்தில் ஸ்ரீ ராமர் கௌசலை, தன் தம்பி இலட்சுமணர் இவர்களுக்கு உபதேசம் செய்யும் ஸ்லோகங்களால் நன்கு விளங்கும். ஸ்ரீ ராமர் தான் வனத்துக்குபோவதை தடுக்கும் தன் தாயான கௌசல்யாதேவியிடம் அம்மா உலகத்தில் தர்மம் அன்ருே மேலானது. தர்மத்திலேயன்ருே ஸத்யம் நிலை நிற்கிறது. உத்தமமான இந்த பித்ரு வசன பரிபாலனமும் தர்மத்தைப்பற்றியதேஎன்று சொல்லியிருக்கிருர்.

(தொடரும்)

Printed by S. Kalyanasundaram at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam.
Published by A. Gopaladesikachariar and S. Kalyanasundaram.